

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

மாண்புமிகு பாரதப் பிரதமர்
திரு. **நரேந்திர மோடி** அவர்களிடம்

அளித்த கோரிக்கை மனு

3.6.2014

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்

மாண்புமிகு பாரதப் பிரதமர் **திரு. நரேந்திர மோடி**

அவர்களை **3.6.2014** அன்று புதுடெல்லியில் நேரில்

சந்தித்து அளித்த கோரிக்கை மனுவின் தமிழாக்கம்

வெளியீடு :

இயக்குநர்,

செய்தி – மக்கள் தொடர்புத்துறை,

சென்னை .

சிறப்பு வெளியீடு எண். 41

தமிழரசு

ஜூன் 2014

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி – மக்கள் தொடர்புத்துறை,
சென்னை .

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்,
110, அண்ணா சாலை,
சென்னை – 600 002.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்
மாண்புமிகு பாரதப் பிரதமர் **திரு. நரேந்திர மோடி**
அவர்களை **3.6.2014** அன்று புதுடெல்லியில் நேரில்
சந்தித்து அளித்த கோரிக்கை மனுவின் தமிழாக்கம்

---

## I. நீர் ஆதாரங்கள் பிரச்சினைகள்

**a) காவிரி நதி நீர் பிரச்சினை நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை செயல்படுத்துவதற்காக, காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் காவிரி நீர் முறைப்படுத்தல் குழுவை அமைத்தல்.**

எங்களுடைய தொடர்ச்சியான தளராத முயற்சியாலும், உச்சநீதிமன்றத்தின் தலையீட்டினாலும் **5.2.2007** ஆம் நாளிட்ட காவிரி நதிநீர் பிரச்சினை நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை, மத்திய அரசு, **19.2.2013** அன்று அறிவிக்கையிட்டுள்ளது. தமிழ்நாடு அரசு, காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் காவிரி நதிநீர் முறைப்படுத்தல் குழுவை விரைவில் அமைக்குமாறு மத்திய அரசை வலியுறுத்தி வந்துள்ளது. தற்காலிக கண்காணிப்புக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அது பயனுள்ளதாக இல்லை. மேற்சொன்ன இரண்டையும் உடனடியாக அமைக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

b) **உச்சநீதிமன்றத்தின் 7.5.2014 ஆம் நாளிட்ட தீர்ப்பின்படி, முல்லை பெரியாறு அணையின் நீர்மட்டம் 142 அடியாக உயர்த்தப்படுவதை மேற்பார்வை செய்வதற்காக கண்காணிப்புக்குழுவில் மத்திய நீர் ஆணையத்திலிருந்து பிரதிநிதி ஒருவரை நியமித்தல்.**

உச்சநீதிமன்றம், அதனுடைய வரலாற்றுச் சிறப்புமிக்க 7.5.2014 ஆம் நாளிட்ட தீர்ப்பில், கேரளாவின் 2006 ஆம் ஆண்டு திருத்தச் சட்டம் அரசமைப்புக்கு மாறானது என்றும் முல்லை பெரியாறு அணையில் அதனுடைய பயன்பாட்டை மீறுகிற வகையில் செயல்படுகிறது என்றும் தமிழ்நாட்டுக்கு ஆதரவாக தீர்ப்பளித்துள்ளது. நீதிமன்றம், அணையில் 142 அடி நீரைத் தேக்கி வைப்பதற்கு தமிழ்நாட்டுக்கு அனுமதியளித்துள்ளது. இதனை, மத்திய நீர் ஆணையத்தைச் சேர்ந்த ஒரு பிரதிநிதி, தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்கள் ஒவ்வொன்றிலிருந்தும் ஒரு பிரதிநிதி வீதம் இருவர் என மூவர் மேற்பார்வை செய்வர். தமிழ்நாடு அரசு அதனுடைய பிரதிநிதியை நியமனம் செய்ததுடன், மத்திய அரசு, அதனுடைய பிரதிநிதியை 3 உறுப்பினர் கண்காணிப்புக்குழுவில் நியமிக்க வேண்டுமென்று கடிதமெழுதியது. கண்காணிப்புக் குழு, தென்மேற்கு பருவமழை தொடங்குவதற்கு முன் பதவியேற்க வேண்டும். அதனால், தமிழ்நாடு, அணையில் 142 அடி வரை நீரைத் தேக்கி வைப்பது என்ற ஆணையை உடனடியாகச் செயல்படுத்த இயலும்.

c) **கேரள அரசு, நெய்யாறு அணையிலிருந்து நீரைத் திறந்து விடுதல்:**

மாநிலங்களின் சீரமைப்புக்கு முன்னர் முன்னாள் திருவாங்கூர் கொச்சி மாநிலத்தின் ஒரு பகுதியாக இருந்த கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டத்தைச் சேர்ந்த 9,200 ஏக்கர் நிலம், நெய்யாறு பாசன ஏற்பாட்டின் இடதுகரைக் கால்வாய் மூலம் பயன்பெற வேண்டியிருந்தது. மாநிலங்கள் சீரமைக்கப்பட்ட பின்னர், விளவங்கோடு வட்டம் தமிழ்நாட்டுக்கு மாற்றப்பட்டது. 2004 பிப்ரவரி வரையில் பாசனத்திற்காக, நெய்யாறு அணையிலிருந்து நீர் திறந்து விடப்பட்டது. நெய்யாறு, மாநிலத்திற்கு இடையே உள்ள ஆறு என்ற காரணத்தின் பேரில், 2004 மார்ச்சிலிருந்து நீர் வழங்கப்படுவதை கேரள அரசு திடீரென நிறுத்தி விட்டது. தமிழ்நாட்டிற்கு, நெய்யாறு அணையிலிருந்து மீண்டும் நீர் வழங்குமாறு கேரள அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்று மாண்புமிகு பிரதமரை நான் கேட்டுக் கொள்கிறேன்.

**d) ஆறுகளை இணைத்தல்:**

**(i)** மகாநதி—கோதாவரி—கிருஷ்ணா—பெண்ணாறு—பாலாறு—காவிரி மற்றும் குண்டாறு ஆகிய நதிகளை ஒருங்கிணைக்கும் திட்டத்தைச் செயல்படுத்துமாறு தமிழ்நாடு அரசு, மத்திய அரசை வலியுறுத்தி

வந்துள்ளது. மேலும், தீபகற்ப ஆறுகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேற்கு நோக்கி பாய்கிற ஆறுகளான பம்பை, அச்சன்கோவில் ஆகியவற்றின் நீரை தமிழ்நாட்டிலுள்ள வைப்பாறுக்குத் திருப்பி விடுமாறும் வலியுறுத்தி வந்துள்ளது.

உச்சநீதிமன்றம், பொதுநல வழக்கு ஒன்றில், அதனுடைய 27.2.2012 ஆம் நாளிட்ட ஆணையில், ஆறுகளை ஒருங்கிணைப்பதற்கான திட்டத்தைச் செயல்படுத்த, தனிக் குழு ஒன்றை அமைக்குமாறு, மத்திய நீர் ஆதாரங்கள் அமைச்சகத்திற்கு உத்தரவிட்டது. 2013 மேத் திங்களில் குழு அமைக்கப்பட்ட பின்னர், மத்திய நீர் ஆதாரங்கள் அமைச்சகம், இத்திட்டத்தைச் செயல்படுத்த, நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. நான், பின்வரும் கோரிக்கைகளை முன் வைக்கிறேன்.

* ஆறுகளை ஒருங்கிணைப்பதற்கான குழு செயலாக்கப்படுத்தப்பட வேண்டும்.

* நாட்டிலுள்ள நீர் ஆதாரங்கள் உரிய அளவு பயன்படுத்தப்படுவதற்காக, மாநிலங்களுக்கிடையிலான அனைத்து ஆறுகளும் தேசியமயமாக்கப்பட வேண்டும்.

### (ii) மாநிலத்திற்குள் உள்ள ஆறுகளை ஒருங்கிணைத்தல்

#### a) அத்திக்கடவு–அவினாசி வெள்ளக் கால்வாய்த் திட்டம்

- ✶ அத்திக்கடவு–அவினாசி வெள்ளக் கால்வாய்த் திட்டத்தை, ரூ.1,862 கோடி மதிப்பீட்டுச் செலவில் செயல்படுத்துவதற்காக, தமிழ்நாடு அரசு, மத்திய அரசின் நிதியுதவியைக் கோரியது. முன்னுரிமை அடிப்படையில் இத்திட்டத்திற்கு அனுமதியளிக்கப்படலாம்.

- ✶ ரூ. 500 கோடி மதிப்பீட்டுச் செலவிலான பெண்ணையாறு (சாத்தனூர் அணை) – பாலாறு இணைப்புத் திட்டம் மற்றும் பெண்ணையாறு–நெடுங்கால் அணைக்கட்டு–பாலாறு இணைப்புத் திட்டம் விரைவுப்படுத்தலாம்.

#### b) காவிரி–குண்டாறு ஏரி

முந்தைய அரசால் கிடப்பில் போடப்பட்டு பின்னர் திருப்பியனுப்பப்பட்ட ரூ. 5,166 கோடி செலவிலான காவிரி–வைகை–குண்டாறு ஆகியவற்றை இணைப்பதன் மூலம் காவிரி ஆற்றின் வெள்ள நீரை, வறட்சிப் பாங்கான பகுதிகளுக்குத் திருப்பி விடுவதற்கான செயற்குறிப்புக்கு விரைவில் ஒப்புதல் அளிக்கப்படலாம்.

### e) காவிரி நவீனமயமாக்கல் திட்டம்

காவிரி ஆறு, தமிழ்நாட்டின் உயிர்நாடியாகும். காவிரி நதிநீர் பிரச்சினை நடுவர் மன்றத்தின் இறுதி ஆணை அறிவிக்கையிடப்பட்டதன் மூலம் காவிரி வடிநிலத்தில் ரூ.11,421 கோடி செலவிலான கால்வாய் நவீனமயமாக்கல் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்படலாம்.

## II. இலங்கைத் தமிழர் பிரச்சினை

இலங்கையில் தமிழ் சிறுபான்மையினர் மீது நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலை என்று சுட்டிக்காட்டப்பட்ட இலங்கை உள்நாட்டு போரின் இறுதிக்கட்ட பின்விளைவுகளைக் கண்டு தற்போதைய இலங்கை அரசுடன், இந்தியா கொண்டுள்ள உறவுகள் தொடர்பாக தமிழர்களிடையேயும், தமிழ்நாட்டிலுள்ள மக்களிடையேயும் கசப்பான உணர்வு நிலவுகிறது. இலங்கையில் தமிழ் சிறுபான்மையினரிடம் தொடர்ந்து பாகுபாடு காட்டப்படுவதையும், அவர்களுடைய மனித உரிமைகள் மீறப்படுவதையும் கண்டித்து, தமிழ்நாடு சட்டப்பேரவையில் நான்கு தீர்மானங்கள் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டுள்ளன.

இலங்கையில் இனப்படுகொலையைக் கண்டித்தும், இனப்படுகொலைக்குக் காரணமானவர்களை விசாரணைக்கு

உட்படுத்தி, அதன் மூலம் இலங்கையிலுள்ள தமிழர்களுக்கு நியாயம் கிடைக்கவும் ஐக்கிய நாடுகள் சபையில் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவர இந்தியா துணை நிற்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

## III. மீனளப் பிரிவு

**a) பாக் ஜலசந்தியில் இந்திய மீனவரின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளைப் பாதுகாத்தலும் அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்தலும்.**

இலங்கைக் கடற்படையினர், தமிழ்நாட்டு மீனவர்களைத் தாக்கிய 67 சம்பவங்கள் குறித்தும் அவர்களை கைது செய்த 76 சம்பவங்கள் குறித்தும் அப்போதைய பிரதமருக்கு கடந்த மூன்றாண்டுகளில் நான் 41 தடவைகள் கடிதம் எழுதியுள்ளேன். இந்தச் சம்பவங்கள், தமிழ்நாடு மீனவ சமுதாயத்தினரிடையே பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அப்பாவி இந்தியர் மீதான தாக்குதலானது, இந்தியாவின் மீது தொடுக்கப்படுகின்ற தாக்குதலாகும் என்பதால் இந்த சம்பவங்கள் தேசிய பிரச்சினையாக ஆகியுள்ளன. ஆனால் முந்தைய அரசு இந்த பிரச்சினையை கடுமையாக கருதிப் பார்க்கவில்லை.

இருநாடுகளின் மீனவர்களுக்கிடையிலான பேச்சுவார்த்தைகளுக்கு நமது மீனவர்கள் முன்வந்துள்ள

போதிலும், இலங்கை வெளியுறவு அமைச்சக அதிகாரிகளின் முரட்டுப் பிடிவாதம் காரணமாக 12.5.2014 அன்று கொழும்பில் நடைபெற்ற இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் பாக் ஜலசந்தி பகுதியில் இந்திய (தமிழ்நாடு) மீனவரின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை பாதுகாப்பதற்கும் அவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்குமான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என மாண்புமிகு பிரதமரிடம் கேட்டுக் கொள்கிறேன்.

**b) கச்சத்தீவினை மீட்டல் மற்றும் தமிழ்நாட்டு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடிக்கும் உரிமைகளை மீட்டளித்தல்.**

தமிழ்நாட்டில் இராமநாதபுரம் மாவட்டத்தின் ஒரு பகுதியான கச்சத்தீவு, இராமேஸ்வரத்தின் பாக் ஜலசந்தியில் ஏறத்தாழ 285 ஏக்கர் நிலப்பரப்புடன் அமைந்துள்ள சிறு தீவாகும். இது, முதலில் இராமநாதபுரம் அரசருக்கு உரிமையுடையதாக இருந்ததற்குப் போதிய ஆவண ஆதாரமிருக்கிறது. இந்திய மீனவர்கள், கச்சத்தீவிலும், அதனைச் சுற்றியுள்ள இடங்களிலும் பாரம்பரிய மீன்பிடிக்கும் உரிமைகளைப் பெற்றிருந்தனர். 1974 மற்றும் 1976 ஆம் ஆண்டில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின்படி, இலங்கையிடம் கச்சத்தீவு விட்டுக் கொடுக்கப்பட்டது. அன்றிலிருந்து கச்சத்தீவை சுற்றிலும் மீன்பிடிப்பதற்கான

தமிழ்நாட்டு மீனவர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு வந்துள்ளன.

1991 ஆம் ஆண்டில் கச்சத்தீவு மற்றும் அதன் அருகாமையிலுள்ள கடற்பகுதியை இந்தியாவுக்கு மீட்டளிப்பதற்கு தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் இயற்றப்பட்டது. மேலும், கச்சத்தீவு மற்றும் அருகாமையிலுள்ள கடற்பகுதியை என்றென்றும் குத்தகைக்கு எடுப்பதற்கான சாத்தியக் கூறினை ஆராய்வதற்கு 2003 ஆம் ஆண்டில் மத்திய அரசிடம் செயற்குறிப்பு ஒன்று அனுப்பப்பட்டது.

நான் தனிப்பட்ட முறையில், 2008 ஆம் ஆண்டில் உச்சநீதிமன்றத்தில் இது தொடர்பாக ரிட் மனு (ரிட் மனு (சிவில்) எண்.562/2008) ஒன்றை தாக்கல் செய்துள்ளேன். தமிழ்நாடு அரசும் 2011 ஆம் ஆண்டில் தன்னையும் ஒரு தரப்பாகச் சேர்த்துக் கொண்டது. 1960 ஆம் ஆண்டு பெருபாரி வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி, இந்தியாவிற்குச் சொந்தமான யாதொரு நிலப்பகுதியின் ஒரு பகுதியையும், அரசமைப்புச் சட்டத் திருத்தம் வாயிலாக மட்டுமே மற்றொரு நாட்டிடம் விட்டுக் கொடுக்க இயலும். எனினும், அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்யப்படாமல் இலங்கையிடம் கச்சத்தீவு விட்டுக் கொடுக்கப்பட்டது. எனவே, இது சட்டப்பூர்வமற்றது மற்றும் செயல்திறனற்றதுமாகும். கச்சத்தீவையும் அதன் அருகாமையிலுள்ள மீன்பிடிப்புப் பகுதிகளையும் அரசமைப்புச் சட்டத்திற்கு முரணாக

கைப்பற்றியதால் துணிச்சல் பெற்றுள்ள இலங்கைக் கடற்படையினர் பாரம்பரிய மீன்பிடிக்கும் பகுதிகளில் மீன்பிடித்து வருகின்ற நமது அப்பாவி மீனவர் மீது அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

எனவே, மத்திய அரசு 1974 மற்றும் 1976 ஒப்பந்தங்களை வழக்கிலிருந்து விட்டொழிப்பதற்கும், கச்சத்தீவை மீட்டு, தமிழ்நாட்டு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை மீட்பதற்கும் முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**c) மீனளங்களைப் பல்திறப்படுத்துவதற்கான விரிவான சிறப்பு தொகுப்புத் திட்டம்**

**(i) அகன்ற அடிப்பகுதி கொண்ட பெரிய பை வலை இழுவைப் படகுகளை நீண்ட நீராவிக் கப்பலாக மாற்றுதல்.**

இது, பாக் வளைகுடாவில் அகன்ற அடிப்பகுதி கொண்ட பெரிய பை வலை இழுவைப் படகுகளின் அழுத்தத்தைக் குறைக்கும். இதற்கு மூன்றாண்டுகளுக்கு மேலான கால அளவில் ரூ. 975 கோடி செலவு பிடிக்கும்.

**(ii) நடுக்கடலில் மீன்பதப்படுத்தும் பூங்காவை அமைப்பதற்கு நிதியுதவி**

இத்திட்டத்தின் கீழ், சுமார் ரூ.80 கோடி செலவில் நடுக்கடலில், ‘‘தாய் கப்பல்’’ ஒன்று நிலைநிறுத்தப்படும். இது,

ஆழ்கடலில் வணிக ரீதியான மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ள சிறிய கப்பல்களுக்கு உதவி புரியும். இது மீன்களின் மதிப்பைக்கூட்டுவதுடன் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்களின் வேலைச் சுமையைக் குறைக்கும்.

### (iii) விசைப்படகுகளுக்கான உயர்வேக டீசல் குறித்த மத்திய ஆயத்தீர்வையை ஈடு செய்தல்

இத்திட்டத்தின் கீழ் பயனீட்டாளர்களுக்கான (படகு உரிமையாளர்கள்) தகுதியாவது, அவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்க வேண்டும் (இது நடைமுறை சாத்தியமற்றது) படகு ஒன்றுக்கு 500 லிட்டர் மட்டுமே மாதாந்திர உச்சவரம்பாக இருக்கும். இதுவும் சாத்தியமற்றது. இத்திட்டத்தைச் செயல்படுத்துகிற வகையில், இத்தகைய நிபந்தனைகள் உடனடியாக மறு ஆய்வு செய்யப்பட வேண்டும்.

### (iv) நாட்டுப் படகுகளை விசைப் படகுகளாக மாற்றுதல்

தமிழ்நாட்டில், 32,000க்கு மேற்பட்ட நாட்டுப் படகுகள் இருப்பதால், ஆண்டொன்றுக்கு 1,000 நாட்டுப் படகுகளை விசைப்படகுகளாக மாற்றுவதற்கான தற்போதைய நிதியுதவியான ரூ.3 கோடி என்பது மிகவும் குறைவானதாகும். ஆண்டொன்றுக்கு ரூ. 9 கோடியாவது வழங்கப்பட வேண்டும். அப்போது தான் ஐந்தாண்டு கால அளவில் அனைத்து நாட்டுப் படகுகளையும் விசைப்படகுகளாக மாற்ற இயலும்.

**(v) ஆழ்கடல் மீன்பிடிப்புக்காக உள் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்**

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மூக்கையூர் மற்றும் இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகங்களிலும் திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள எண்ணூர் துறைமுகத்திலும் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்காக, ரூ.420 கோடியை 100 சதவீத மத்திய அரசு மானியமாக வழங்குமாறு மத்திய அரசிடம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**(vi) மீன்பிடித் துறைமுகங்களையும் ஆற்று முகத் துவாரங்களையும் தூர் வாருதல்.**

இந்தச் செயல் நோக்கத்திற்காகத் தமிழ்நாட்டிற்கு ஆண்டுதோறும் ரூ.10 கோடி அளவு நிதியுதவி அளிக்கப்பட வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறது.

சுருங்கக் கூறுவதாயின், ரூ.1,520 கோடி விரிவான சிறப்பு தொகுப்புதவியும், தூர்வாரும் பணியை மேற்கொள்வதற்காக, ஆண்டொன்றுக்கு தொடர் மானியமாக ரூ.10 கோடியும் கோரப்படுகிறது.

# IV. மின்சக்தித் துறை

## a) மத்திய மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து கூடுதல் மின்சாரம் ஒதுக்கீடு செய்தல்

கூடங்குளம் அணுமின் நிலைய அலகுகள்–I மற்றும் IIலிருந்து மொத்தம் 450 மெகாவாட், நெய்வேலி பழுப்பு நிலக்கரி அனல் மின் நிலைய விரிவாக்கத்திலிருந்து 2x250 மெ.வாட், தூத்துக்குடியில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவன கூட்டுத் தொழில் நிறுவனத்திடமிருந்து 2x500 மெ.வாட், வள்ளூரில் உள்ள தேசிய அனல் மின் கழக கூட்டுத்தொழில் நிறுவனத்திடமிருந்து 500 மெ.வாட் என்ற மொத்த உற்பத்தியில் 15 சதவிகித மின் சக்தியை மத்திய அரசு ஒதுக்கீடு செய்யவில்லை. உண்மை நிலையைக் கருதிப் பார்த்து, திட்டங்களை விரைந்து செயல்படுத்துவதற்காக மின் உற்பத்தி நிலையம் அமையவுள்ள மாநிலம், நிலம், நீர், நிலக்கரி போன்ற தேவையான இடுபொருட்களைப் பெறுவதற்காக ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டியுள்ளது. எனவே, தமிழ்நாட்டிற்கு ஒதுக்கீடு செய்யப்படாத இந்த 15 சதவீத மின்சக்தி முழுவதையும் வழங்க வேண்டுமென மத்திய அரசிடம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

b) **மின் அனுப்புகை உள்கட்டமைப்பை மேம்படுத்துதல்:**

தென்னக மின் கட்டமைப்புகளில் மின்பற்றாக்குறையை முடிவுக்கு கொண்டு வருவதற்கு, இரண்டாவது மின்கம்பித் தொடர் நிறுவுவதன் மூலம் கருநாடக மாநிலம் ரெய்ச்சூரிலிருந்து மகாராஷ்ட்டிரா மாநிலம் கோலாப்பூர் வரையில் 765 கி.வோ. மின் அனுப்புகை கம்பித் தொடர் மூலம் மின்சக்தியை அனுப்புவதற்கு வகை செய்யலாம்.

இந்திய மின் கட்டமைப்புக் கழகத்தால் ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மண்டலங்களுக்கிடையேயான 765 மின் அனுப்புகை கம்பித் தொடர் அமைப்பை விரைந்து முடிக்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

1. வேமகிரி (ஆந்திர பிரதேசம்) – ஆங்குல் (ஒரிசா)
2. நரேந்திரா (கருநாடகம்)– கோலாப்பூர்(மகாராஷ்டிரம்)
3. ஹைதராபாத் (ஆந்திரப் பிரதேசம்) – வார்தா (மகாராஷ்டிரம்)

சண்டிகரில் உள்ள மின் நிலையங்களில் கிடைக்கக்கூடிய மின்சக்தியை அனுப்புவதற்கும், சண்டிகரிலிருந்து தமிழ்நாட்டிலுள்ள புகளூருக்கு, 6,000 மெகாவாட் மின்சக்தியை அனுப்புவதற்குமான ஹெச்.வி.டி.சி. மின் அனுப்புகை கம்பித் தொடர் அமைக்கும் பணியை மின் கட்டமைப்புக் கழகம் உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

**c) பசுமை மின் வழித்தடத்துக்கான மத்திய அரசின் உதவி புதுப்பிக்கத்தக்க மின்சக்திக்கான மின் அனுப்புகை உள் கட்டமைப்பை உருவாக்குதல்.**

காற்று சக்தியின் மூலம் மட்டுமே 7,252 மெகாவாட் நிறுவுதிறனுடன் கூடிய புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தியை தொடர்ந்து உற்பத்தி செய்து, தமிழ்நாடு மாநிலம் முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது. புதுப்பிக்கத்தக்க மின் சக்திக்கான, அனுப்புகை உள்கட்டமைப்பு போதுமான அளவில் இல்லாதது ஒரு பிரச்சினை ஆகும். குறைவான திறன் பயன்பாட்டின் காரணமாக புதுப்பிக்கத்தக்க மின்சக்தியை அனுப்புவதற்காக ஆகும் செலவு, வழக்கமான ஆதாரங்களிலிருந்து அனுப்பப்படும் மின்சக்திக்கான செலவுடன் ஒப்பிடுகையில், யூனிட் ஒன்றுக்கு நான்கு முதல் ஐந்து மடங்கு செலவு ஏற்படுகிறது.

மாநிலங்களுக்கிடையேயான, பசுமை மின் வழித்தட உருவாக்கத்திற்கு மத்திய அரசு ஆதரவளிக்க வேண்டும். பகுதி சூரிய வெப்ப சக்தியின் ஒரு பகுதியை அனுப்புவதற்கான, மின் அனுப்புகை திட்டங்கள் தொடர்பாக, ரூ.2,250 கோடி மானியம் வழங்குமாறு மத்திய அரசிடம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

## V. உதவி மானியங்களை வழங்குவதில் குறைவு

2013–2014 ஆம் ஆண்டு வரையில் மத்திய அரசிடமிருந்து தமிழ்நாடு அரசுக்கு பெருமளவில் உதவி மானியங்கள் வர வேண்டியுள்ளன. இது, மாநிலத்தின் நிதிநிலையை வெகுவாக பாதித்துள்ளது.

### a) 13 ஆம் நிதிக்குழுவின் கீழ் செயல்பாட்டு மானியம்

13 ஆம் நிதிக்குழு, தமிழ்நாட்டிலுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2011–2012 முதல் 2014–2015 வரையிலான கால அளவுக்கு பொதுவான செயல்பாட்டு மானியமாக ரூ. 1,888 கோடி பரிந்துரைத்துள்ளது. இத்தொகைக்கு மாறாக, 2013–2014 வரையிலான கால அளவுக்கு இதுவரையில் ரூ. 125 கோடி வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு, ஒன்பது நிபந்தனைகளுள் ஆறு நிபந்தனைகளுக்கு முற்றிலுமாக இணங்கி நடந்துள்ளது. எஞ்சியுள்ள மூன்று நிபந்தனைகளுக்கு போதுமான அளவுக்கு இணக்கமாக நடந்துள்ளது. இத்தகைய பின்னணியில், தமிழ்நாடு குறிப்பிடத்தக்க அளவுக்கு இணக்கமாக நடந்திருப்பதைக் கருத்திற்கொண்டு, மானியம் முழுவதுமாக வழங்கப்படலாம்.

**b) விரைவுப்படுத்தப்பட்ட பாசன பயன்பாட்டுத் திட்டம்– ஈடு செய்யப்படாமை.**

**I. வெள்ளப்பாதுகாப்புப் பணிகளுக்கான மானியங்கள்**

**2009–2010** மற்றும் **2010–2011** ஆம் ஆண்டில் மத்திய அரசின் பங்குத் தொகையான **(75%)** ரூ.**460.07** கோடியுடன் ரூ. **613.43** கோடி அளவுக்கு, தமிழ்நாட்டில் ஐந்து வெள்ளப் பாதுகாப்புப் பணிகளுக்கு, முதலீட்டுக்கான அனுமதி வழங்கப்பட்டது.

**2012–2013** ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.**625.77** கோடி செலவில் ஐந்து பணிகள் முடிக்கப்பட்டன. இருப்பினும் மத்திய அரசு, இதுவரையில், மொத்தம் ரூ.**59.82** கோடி மானியம் மட்டுமே வழங்கியுள்ளது. ரூ.**388.08** கோடியை விடுவிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது. பரிந்துரைக்கப்பட்ட மானியமான ரூ. **388.08** கோடியை தமிழ்நாட்டுக்கு வழங்க, மாண்புமிகு பாரதப் பிரதமர், மத்திய நீர் ஆதாரங்கள் மற்றும் நிதித்துறைக்கு உத்தரவிடலாம்.

**II. பாசனப் பகுதி மேம்பாடு மற்றும் நீர் மேலாண்மைத் திட்டம்**

**2013–14** ஆம் ஆண்டு வரையில் முடிக்கப்பட்ட பணிகளுக்காக, மத்திய அரசின் நிதியுதவியான

ரூ.77.47 கோடியில், மத்திய அரசு, ரூ.5.91 கோடியை மட்டுமே வழங்கியுள்ளது. எஞ்சியுள்ள தொகையான ரூ.71.56 கோடி, விரைவில் விடுவிக்கப்படலாம்.

c) **பள்ளிக் கல்விக்கான மானியங்கள்**

i) **அனைவருக்கும் கல்வித் திட்டம்**

**2011–2012** ஆம் ஆண்டுக்காக, மனிதவள மேம்பாட்டு அமைச்சகம், **2013–2014** ஆம் ஆண்டில் ஆசிரியர்கள் சம்பளம் குறித்த ஒப்படைப்பு பொறுப்பிற்காக ரூ.438.38 கோடி அனுமதித்துள்ளது. அதில், மத்திய அரசின் 65% பங்குத் தொகை, ரூ. 284.95 கோடி என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதற்கு மாறாக, மத்திய அரசு, ரூ. 57 கோடியை மட்டுமே விடுவித்துள்ளது. எஞ்சியுள்ள ரூ. 228 கோடி அளவிலான மானியத் தொகை இன்னும் எதிர்பார்க்கப்படுகிறது.

**ii) கல்வி உரிமைக்கான இழப்பீட்டுத் தொகை**

தனியார் பள்ளிகளில் கல்விச் சட்டத்தின் கீழ் 2013–2014ஆம் ஆண்டுக்கான சேர்க்கைகளுக்கான மொத்த எண்ணிக்கையானது 49,864 ஆகும். இதற்கு அளிக்கப்பட வேண்டிய ஈடுசெய் தொகையானது ரூ.25.13 கோடி என கணக்கிடப்பட்டுள்ளது. கூடிய விரைவில் ரூ.25.13 கோடி தொகையை வழங்குமாறு மத்திய அரசிடம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

### iii) ராஷ்டிரீய மத்தியமிக் சிக்ஷா அபியான்

2010–2011 ஆம் ஆண்டில், திட்ட ஏற்பளிப்புக்குழு, ரூ.374.40 கோடி என்ற 75 சதவீத மத்திய அரசின் பங்குத் தொகையுடன், ரூ.499.20 கோடி மதிப்பிலான 344 உள்கட்டமைப்புப் பணிகளுக்கு அனுமதித்தது. மத்திய அரசிடமிருந்து ரூ.310.52 கோடி மட்டுமே பெறப்பட்டது. மாநில அரசு நிதியிலிருந்து ஏற்கெனவே செலவிடப்பட்ட ரூ.63.88 கோடி எஞ்சிய தொகை இதுவரையில் பெறப்படவில்லை.

2011–2012 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட திட்ட ஏற்பளிப்புக்குழுவின் ஏற்பளிப்புத் தொகை ரூ.675.05 கோடி ஆகும். மத்திய அரசின் முழுமையான பங்குத் தொகையான ரூ.506.29 கோடி இதுவரையில் வழங்கப்படவில்லை. எனவே, 2010–2011 மற்றும் 2011–2012 ஆம் ஆண்டுகளுக்கான ரூ.570.18 கோடி மொத்த நிலுவை கோரிக்கைத் தொகைகளை ஈடுசெய்யுமாறு மத்திய அரசிடம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

### d) மத்திய அரசிடமிருந்து வரவேண்டிய ஏனைய உதவி மானியங்கள்

சாலைகள் மற்றும் பாலங்கள் பராமரிப்பு, குடிசைப்பகுதி மேம்பாடு, கடலோரப் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆகியவற்றுக்கான ரூ.1,083.16 கோடி உதவி மானியங்களும், ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு மெட்ரிக் படிப்புக்கு பிந்தைய படிப்பு உதவித் தொகைக்கான ரூ.279.40 கோடி உதவி மானியங்களும்,

புள்ளியியலை மேம்படுத்தும் திட்டத்திற்கு ரூ.22.91 கோடி உதவி மானியங்களும் விரிவான கைத்தறி வளர்ச்சித் திட்டத்திற்கு ரூ.45.28 கோடி உதவி மானியங்களும் இதுவரையில் வழங்கப்படவில்லை. சீரமைக்கப்பட்ட மத்திய சாலை நிதியின் கீழ் ரூ.71.59 கோடியும் குடும்ப நலத்துறைத் திட்டத்தின் கீழ் ரூ.74.53 கோடியும் இதுவரையில் வழங்கப்படவில்லை. ரூ.1,576.87 கோடி அளவிலான மொத்த மானியத் தொகையை கூடிய விரைவில் வழங்கப்பட வேண்டும்.

## VI. மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களை மறுவடிவமைப்பு செய்தல்:

நிதிக்குழுவின் மூலம், மத்திய அரசிடமிருந்து, மாநில அரசுக்கு மாற்றப்படும் ஆதாரவள விகிதாச்சாரம் தற்போதைய அளவான 54 சதவீதத்திலிருந்து கணிசமாக அதிகரிக்கப்பட வேண்டுமென தமிழ்நாடு அரசு உறுதியாக கருதுகிறது. இது ஒரு நிபந்தனையற்ற மற்றும் தானாகவே நிதி வழங்கும் அமைப்பாக இருப்பதால், முதற்கண் இதனை, வரித்தொகை பகிர்ந்தளிப்பின் மூலம் வழங்கவேண்டும்.

மத்தியில் உள்ள வெவ்வேறு அமைச்சகங்களின் விருப்பம் மற்றும் தேவைக்கேற்ற வகையில், திட்ட அடிப்படையிலான திட்ட நிதியுதவியைப் பெறும் நிலையில் மாநிலங்கள் உள்ளன. இது, வளர்ச்சியில் சம பங்குதாரர்களாகக் கருதப்பட வேண்டிய மாநிலங்களைச் சிறுமைப்படுத்துவதாக உள்ளது.

**2014–2015** ஆம் நிதியாண்டிலிருந்து, மத்திய அரசு பொறுப்பேற்கும் அனைத்துத் திட்டங்கள் மீதான மத்திய திட்ட நிதி ஒதுக்கீடு மாநிலத் திட்டத்திற்கு மத்திய நிதியுதவியாக வகைப்படுத்தப்பட்டு மாநிலத் திட்ட நிதிஒதுக்கீட்டின் ஒரு பகுதியாக சேர்க்கப்படும் என்று மத்திய திட்டக்குழு அண்மையில் முடிவு செய்துள்ளது. இத்தகைய சிக்கலான ஏற்பாட்டு முறை குறித்து தமிழ்நாடு அச்சமடைகிறது. இத்திட்ட வடிவமைப்பு, மாநிலத்தின் முன்னுரிமைகளை பிரதிபலிக்கலாம் அல்லது பிரதிபலிக்காது என்று மாநில அரசு கூறவில்லை. திட்ட நிதி ஒதுக்கீட்டிற்கான நிதியுவியை மாநிலம் எந்தவகையிலும் கட்டுப்படுத்தாது. மத்திய நிதிஒதுக்கீட்டில் குறைவு, மத்திய நிதி வழங்குவதில் தாமதம் ஆகியவை மாநிலங்களின் செயல்பாட்டை பாதிக்கும். முந்தைய மத்திய அரசின் பதவி காலத்தில் கடைசி சில மாதங்களில், இத்தகைய முடிவுகளைஎடுத்திருக்கக் கூடாது. **2014–2015** ஆம் ஆண்டுக்கான முதன்மை வரவு–செலவுத் திட்ட அறிக்கை இன்னும் தாக்கல் செய்யப்படாததால், இத்தகைய சூழ்நிலையை திருத்திக் கொள்வதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பு ஆகும்.

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், கூடுதல் மத்திய நிதியுதவித் திட்டங்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில், நிதி ஒதுக்கீட்டிற்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட வழிகாட்டிக் குறிப்புகள் மற்றும்

வரையறைகளில், விதிமுறை வழுவாமையை தமிழ்நாடு அரசு கோருகிறது. அதில், நாங்கள் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் மற்றும் கூடுதல் மத்திய நிதியுதவி திட்டங்களுக்காக உறுதி செய்யப்பட்டுள்ள ஆண்டு நிதி ஒதுக்கீட்டு முறையில் தெளிவு, உறுதிப்பாடு, காலந்தவறாமை, ஆகியவை இருக்க வேண்டுமென்று எடுத்துக்காட்டியுள்ளோம். மேலும், ஆண்டின் இடைப் பகுதியில் தன்னிச்சையாக நிதி ஒதுக்கீட்டைக் குறைப்பது மற்றும் நிதி வழங்காதது ஆகியவற்றிலிருந்து மாநிலங்களைப் பாதுகாக்க வேண்டும் என்றும் நாங்கள் எடுத்துக் கூறியுள்ளோம்.

வெவ்வேறு திட்டங்களுக்கான வழிகாட்டிக்குறிப்புகள் குறித்து விரிவாக குறிப்பிட்ட கருத்துரைகளும் தெரிவிக்கப்பட்டுள்ளன. புதிய திட்டங்கள் மற்றும் வழிகாட்டிக் குறிப்புகளை உருவாக்கும்போது, இதனைக் கருத்தில் கொள்ளலாம். மாநிலங்களுக்கிடையேயான பல்வேறு வகைப்பட்ட தேவைகள் திறன் வேறுபாடுகளை நிறைவு செய்ய திட்டங்களின் வடிவமைப்பில், கணிசமான நெகிழ்வுத்தன்மை அவசியமாகும். மாநில நிதியுடன், மத்திய நிதியை சேர்ப்பதற்கு வழிகாட்டி குறிப்புகள் மாநில அரசை அனுமதிக்கப்பட வேண்டும். நிதி வரையறைகளைப் பட்டியலிடுவது இன்றியமையாதது ஆகும். பயன்களின் அளவு தானாகவே அதிகரிக்கப்பட வேண்டும். (உ.ம்)

ஓய்வூதியத் தொகைகள், இந்திரா வீட்டுவசதி திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்கான செலவு.

செயல்படுத்தும் முகவரமைப்புகள் மற்றும் சிறப்பு நோக்க அமைப்புகளுக்கு மாநிலம் மற்றும் மாவட்ட அளவில் நேரடியாக நிதி வழங்குதல் நிறுத்தப்பட வேண்டும். மாநில அரசின் வரவு—செலவுத் திட்ட அறிக்கை மூலமாக மட்டுமே மத்திய நிதி வழங்கப்பட வேண்டும். இதுவே மாநில அரசின் தன்னாட்சி உரிமைக்கு நன்மதிப்பளிக்கிறது. மேலும், இது மத்திய, மாநில அரசுத் திட்டங்களைச் செயல்படுத்துவதில், இணைந்து பணியாற்றவும் கண்காணிப்பை மேம்படுத்தவும் வகை செய்யும்.

### VII. நேரடி ஆதாய மாற்றல்

நாட்டில் மிகவும் முன்னேற்றம் அடைந்துள்ள மற்றும் நன்கு நிருவகிக்கப்படும் மாநிலங்களின் ஒன்றான தமிழ்நாடு, நிபந்தனையுடன் கூடிய ரொக்க மாற்றல்கள் தொடர்பான திட்டங்களுக்கு, பயனாளிகளின் வங்கிக் கணக்குகள் வாயிலாக நேரடி ரொக்க மாற்றல் முறையை ஏற்கெனவே பின்பற்றி வந்துள்ளது. பொது விநியோகத் திட்டத்தின் கீழுள்ள மானியத் தொகைக் கூறு மற்றும் உரம், மண்ணெண்ணெய் மற்றும் திரவ பெட்ரோலிய எரிவாயு மானியங்கள் முதலியவற்றை ரொக்கமாக வழங்குவதற்கான

யாதொரு நடவடிக்கையையும் தமிழ்நாடு அரசு வன்மையாக எதிர்க்கிறது. இதில் மானிய அளவு குறித்து அல்லாமல், பொருட்கள் கிடைக்ககூடிய தன்மை குறித்து முக்கியமாக கருதிப் பார்க்கப்படுகிறது.

மத்திய அரசு திறமையான நிருவாக நடைமுறையுடன், மாநிலங்கள் முன்னேற்றத்திற்கு உண்மையான பங்குதாரர்களாக இருக்கின்றனர் என்பதை உறுதி செய்வதற்கு, மத்திய அரசு வழங்குகிற நிதியை மாநில அரசுகள் பயனாளிகளின் வங்கிக் கணக்குகளுக்கு நேரடி ரொக்க மாறுதல் செய்ய வேண்டும்.

## VIII. சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கு கூடுதல் மத்திய நிதி ஆதரவு

தமிழ்நாட்டில், மொத்தம் 35.64 இலட்சம் பயனாளிகளுக்கு எட்டு திட்டங்களின் கீழ் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்களுக்கு வகை செய்யப்படுகின்றன. இதில், மத்திய அரசு நிதியுதவியளிக்கும் மூன்று ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் 12.37 இலட்சம் நபர்கள் பயனடைகின்றனர்.

2011 ஆம் ஆண்டு மே மாதத்தில், தமிழ்நாடு அரசு மாதாந்திர ஓய்வூதியத் தொகையை ரூ.500/–லிருந்து ரூ.1000/– ஆக உயர்த்தியது. மத்திய அரசானது மொத்தமுள்ள எட்டு வகைப்பாடுகளுள், மூன்று வகைப்பாடுகளில்

பயனாளி ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.200/– முதல் ரூ.500/– வரையில் மட்டுமே வழங்குகிறது. மாநில அரசின் ஓராண்டிற்கான மொத்த நிதிப் பொறுப்பு ரூ.4,491 கோடி என்ற நிலையில், மத்திய அரசு ஒரு ஆண்டுக்கு சுமார் ரூ.600 கோடி மட்டுமே அளிக்கிறது.

பின்வரும் கருத்துக்களை கருதிப்பார்க்குமாறு நான், மாண்புமிகு பிரதமரிடம் கேட்டுக் கொள்கிறேன்.

1. மத்திய அரசின் ஓய்வூதியத் தொகையை மாதமொன்றுக்கு ரூ.1000/–ஆக உயர்த்துதல்

2. தமிழ்நாட்டைப் போன்று அதிகளவிலான ஓய்வூதியதாரர் வகைப்பாடுகளுக்கு ஓய்வூதியம் வழங்குதல்.

3. மத்திய திட்டங்களின் கீழ் பயனாளிகளின் எண்ணிக்கை குறித்த உச்சவரம்பை நீக்குதல்.

### IX. பொருட்கள் மற்றும் சேவை வரி

மாநிலங்களின் நிதி தன்னாட்சியைப் பாதிக்கிற மற்றும் தமிழ்நாடு போன்ற தயாரிப்பு மற்றும் நிகர ஏற்றுமதி மாநிலத்திற்கு பெருமளவிலான நிரந்தரவருவாய் இழப்பினையும் ஏற்படுத்தக்கூடிய செயல்படுத்தக் கருதப்பட்ட

பொருட்கள் மற்றும் சேவை வரியின் விளைவினைக் கருதிப்பார்த்து தமிழ்நாடு கவலையடைகிறது. நான், மாற்று அணுகுமுறை ஒன்றை தெரிவித்திருந்தேன். அதன்படி, மத்திய அரசானது, மாநிலங்களுக்கிடையிலான வரிவிதிப்புக்கு முக்கியத்துவம் அளிப்பதுடன் மாநிலத்திற்குள் மத்திய ஆயத் தீர்வை மற்றும் சேவை வரி ஆகியவற்றுக்கு மாற்றாக அமைபவற்றை விதித்து, வசூலித்து ஒதுக்கீடு செய்கிற அதிகாரங்கள் ஆகியவற்றை மாநில அரசிடம் முழுமையாக பகிர்ந்தளிக்கப்படலாம்.

தமிழ்நாட்டின் பல்வேறு பிரச்சினைகள் தீர்வு செய்யப்பட வேண்டும். கீழ்க்கண்டவை அதில் அடங்கும்.

- பொருட்கள் மற்றும் சேவைவரியின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்ட வருவாயின் இழப்பு அளவு சுமார் ரூ.9,270 கோடியாகும். கருதப்பட்ட வருவாய் நடுநிலை வீதங்களை காட்டிலும் இது குறைந்ததே இதற்கு காரணமாகும்.

- பொருட்கள் மற்றும் சேவை வரி குழு மற்றும் ஆலோசனைக் குழுக்கள், வரிவிதிப்பு விவகாரங்களில் மாநில சட்டமன்றத்தின் உச்ச உயர்நிலையை புறக்கணிக்கக் கூடிய நிலை ஏற்படும்.

- வருவாய் விளைவு, சாதகமான சூழல் மற்றும் இப்பொருட்களின் உயர்வீத வரிவிதிப்பின் சமூக பாதிப்பு ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு பெட்ரோலியம், பெட்ரோலிய தயாரிப்புகள், ஆல்கஹால், மது ஆகியவற்றை பொருட்கள் மற்றும் சேவை வரிக்கு அப்பாற்பட்டதாக வைத்தல்.

- மத்திய அரசுக்கு இணையாக, புகையிலை மற்றும் புகையிலை தயாரிப்புப் பொருட்கள் ஆகியவற்றுக்கு மாநிலங்கள் உயர்வீத வரிகளை விதிக்க வேண்டியது அவசியமாகும்.

- அறிவிக்கப்பட்ட பொருட்களுக்கு வழிவகை எதுவும் இருக்கக்கூடாது. அது, ஒத்திசைவான கொள்கைக்கு எதிரானதாகும்.

- மாநிலங்களுக்கு ஏற்படுகிற வருவாய் இழப்பை ஈடுசெய்வதற்கு தனிப்பட்ட இழப்பீட்டு அமைப்பு அவசியமாகும்.

பொருட்கள் மற்றும் சேவை வரி குறித்து உரிய முடிவு ஒன்றை எடுக்கிறபோது மேற்சொன்ன அனைத்து பிரச்சினைகளையும் கருத்தில் கொள்ளுமாறு மாண்புமிகு பிரதமரிடம் நான் கேட்டுக் கொள்கிறேன்.

# X. மத்திய விற்பனைவரி இழப்பீடு

பொருட்கள் மற்றும் சேவை வரியை செயல்படுத்துகிற திட்டத்தின் ஒரு பகுதியாக, மத்திய விற்பனை வரிவீதம், 1.4.2007 முதல் 4 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. மேலும், 1.6.2008 முதல் 2 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. பல்வேறு வருவாய் அல்லாத நடவடிக்கைகளை செயல்படுத்தவும், மாநிலங்களுக்கு ஏற்படுகிற வருவாய் இழப்பை ஈடுசெய்யவும், மாநிலங்களுக்கு நேரடியாக நிதியை விடுவிக்கவும் மத்திய அரசு ஒப்புக் கொண்டது. தமிழ்நாடு அரசு அதனுடைய இழப்பீட்டுத் தொகைக் கோரிக்கைகளை, தவறாமல் அளித்துவருகிறது. ஆனால், உறுதியளிக்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையை முழுவதுமாகப் பெறுவதில்லை. 1.4.2007 முதல் 31.03.2012 வரையிலான கால அளவுக்கு மாநில அரசு ரூ. 9,676.46 கோடியை கோரியிருக்க, மத்திய அரசு, ரூ. 2636.50 கோடியை மட்டுமே விடுவித்துள்ளது. 31.03.2012 வரையிலான கால அளவுக்கு ஈடுசெய்யப்படாமல் நிலுவையாக உள்ள ரூ. 7,039.96 கோடியை மத்திய அரசு ஈடுசெய்ய வேண்டியுள்ளது.

## XI. வருமான வரிச்சட்டத்தின் கீழ், வருமானத்திலிருந்து தகுதியான கழிவுத் தொகையை மாநில அரசு விதிப்பதற்கு அனுமதியளிக்காமை

2013 ஆம் ஆண்டு நிதி சட்டமுன் வடிவு, மிகவும் பிற்போக்கான மற்றும் கூட்டாட்சிக்கு எதிரான விதித்துறையையும் கொண்டுள்ளது. வருமான வரிச் சட்டத்தின் திருத்தப்பட்ட 40 ஆம் பிரிவின் சட்ட முன்வடிவின் 7ஆம் பகுதி, வருவாய் கணக்கிடும் நோக்கத்திற்காக, கழிக்கப்படாத, மாநில பொதுத்துறை நிறுவனங்கள் மீதான உரிமத்தொகை, உரிமக்கட்டணம், உரிமம் வாயிலாக, மாநில அரசு ஏதேனும் ஒன்றை விதிக்க வகை செய்கிறது. இத்தகைய அனைத்து வரிவிதிப்புகளும், சட்டப்படிக்கான முறையானவரி விதிப்புகளாக உள்ளன. இவை, வருமான வரிச்சட்டத்தின் 37 ஆம் பிரிவின் கீழ் மாநில பொதுத் துறை நிறுவனங்களின் வருமானத்திலிருந்து கழிக்கத்தக்கதாக இருந்தன.

2013 ஆம் ஆண்டு நிதி சட்ட முன்வடிவின் 7 ஆம் பகுதி ஆட்சேபத்துக்குரியதாக உள்ளது. ஏனெனில்,

- இது மாநில அரசுகளின் வருமானம் மீது மறைமுக வரிவிதிப்பதற்கு ஒப்பானதாகும். மத்திய

வரிவிதிப்பிலிருந்து மாநிலத்தின் சொத்து மற்றும் வருவாய்க்கு விலக்களிக்கிற இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 289 பிரிவின் நோக்கத்தை மீறுவதாக உள்ளது.

- இது, மாநில அரசின் பொதுத் துறை நிறுவனங்களுக்கு மட்டும் பொருந்துவதாகவும், மத்திய பொதுத் துறை நிறுவனங்களுக்கு பொருந்தாததாகவும் முரண்பாடாக உள்ளது.

- இது, வருமான வரிஅதிகாரிகள் தன்னிச்சையான முறையில் வரிவிதிப்பதற்கு பெரிதும் விருப்புரிமை அளிக்கிறது.

இந்த விதித்துறை தவறாக உருவாக்கப்பட்டு, வழிகாட்டப்பட்டது என்று தெளிவாகத் தெரிகிறது. இது நம்மைப் போன்ற கூட்டாட்சி அமைப்புகளுக்கு பொருந்தாது. எனவே, 2014–2015 ஆம் ஆண்டுக்கான முதன்மை வரவு–செலவுத் திட்ட அறிக்கையை தாக்கல் செய்யும்போது, 2013 ஆம் ஆண்டு நிதிச் சட்டத்தின் 7ஆம் பகுதியில் உள்ள பிரச்சினை குறித்து மீண்டும் கவனம் செலுத்தி, இதனால் ஏற்படும் விளைவைத் தணிக்குமாறு மாண்புமிகு பிரதமர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

## XII. வேளாண்மை

### a) வேளாண்மை ஈட்டுறுதித் திட்டம்

பயிர் ஈட்டுறுதித் திட்டம், பாதகமான தட்பவெப்ப நிலைகளின் தாக்கத்திலிருந்து விடுபடுவதற்காக பல்லாயிரக்கணக்கான உழவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிற ஒரே திட்டமாகும். ஐக்கிய முற்போக்குக் கூட்டணி, தேசிய வேளாண்மை ஈட்டுறுதித் திட்டத்தை திரும்பப் பெற்று, அதற்கு பதிலாக 2013 ராபி பருவத்திலிருந்து தேசிய பயிர் ஈட்டுறுதித் திட்டத்தை கொண்டு வந்த அவசரமான முடிவு, உழவர்களுக்கு கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

மேற்சொன்ன திட்டத்தில் தமிழ்நாட்டு உழவர்கள் பிரிமியம் செலுத்த வேண்டும் என்பது அவர்களுடைய சுமையை அதிகரித்துள்ளது. தேசிய வேளாண்மை ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் ஈட்டுறுதி செய்யப்பட்ட தொகையில் பிரிமியத் தொகையின் அளவு 2 சதவீதம் முதல் 3.5 சதவீதம் வரையிலானதாக இருந்தது. மாநில அரசின் 50% பிரிமிய உதவித் தொகையுடன் உழவர்கள், ஈட்டுறுதி செய்யப்பட்ட தொகையில், 1 சதவீதம் முதல் 1.75 சதவீதம் வரையில் மட்டுமே தொகை செலுத்தினர். மாற்றியமைக்கப்பட்ட தேசிய வேளாண்மை ஈட்டுறுதித் திட்டக் கூறின் கீழ் புதிய தேசிய பயிர் ஈட்டுறுதித் திட்டத்தில், உழவர்கள்

செலுத்த வேண்டிய பிரிமியம் 3.75 சதவீதம் மற்றும் அதற்கு மேற்பட்டதாக அதிகரிக்கப்பட்டுள்ளது. தட்பவெப்பநிலையை அடிப்படையாகக் கொண்ட பயிர் ஈட்டுறுதி திட்டத்தில் 4.8% மற்றும் அதற்கும் மேற்பட்டதாக உள்ளது. பிரிமியத் தொகை இவ்வாறு அதிகமாக இருப்பதால் உழவர்கள், தங்களுடைய பயிர்களை ஈட்டுறுதி செய்து, அவர்களுடைய இடர்ப்பாடுகளை தணித்துக் கொள்ள முன்வருவார்களா என்பது உண்மையில் ஐயப்பாடாக உள்ளது.

எனவே, தேசிய பயிர் ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் 2% மற்றும் அதற்கும் மேற்பட்ட கூடுதல் பிரிமியச் சுமையை உழவர்கள் மேல் சுமத்தாமல், மாநில அரசும், மத்திய அரசும் சமமாக ஏற்கலாம் என்று நான் கருத்து தெரிவிக்கிறேன்.

**b) நீடித்த வேளாண்மை வளர்ச்சிக்காக, ராஷ்டிரிய கிரிஷி விகாஸ் திட்டம்/தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம், ஊட்டச்சத்தை அடிப்படையாக கொண்ட உதவித் தொகை திட்டம் மற்றும் தேசிய திட்டம் ஆகியவை உட்பட வேளாண்மைத் துறையிலுள்ள திட்டங்கள் தொடர்பான பிரச்சினைகள்.**

- தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடுகள், போதுமானதாக இல்லை. மாநிலங்களுக்கு அளிக்கப்பட்ட ஆண்டு ஒதுக்கீடுகள், வெளிப்படையாக

அல்லாமலும், தன்னிச்சையான முறையிலும் இருந்தன. மாநிலங்களுக்கு, தொடர்ச்சியான மற்றும் கோட்பாட்டை அடிப்படையாக கொண்ட ஒதுக்கீட்டை முன்னரே தெரிவிக்க வேண்டியது அவசியமாகும். 2014–2015 ஆம் ஆண்டில், தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கான ஒதுக்கீடு ரூ. 1,200 கோடியாகவாவது உயர்த்தப்பட வேண்டும்.

2010 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட உரங்களுக்கான ஊட்டச்சத்து அடிப்படையிலான உதவித்தொகையின் கீழ் நைட்ரஜன், பாஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் உரங்கள் மீதான உதவித்தொகை அளவானது நிர்ணயிக்கப்படுகிறது. இரசாயன உரங்கள் தயாரிப்பாளர்கள் / இறக்குமதியாளர்கள் / அவர்களின் உற்பத்தி / ஏற்றுமதி செலவுத்தொகை அடிப்படையில் சில்லரை விலையை நிர்ணயிக்கலாம். உர நிறுவனங்கள், உழவர்களுக்கு கடுமையான இடர்பாட்டினை ஏற்படுத்தும் வகையில் அவர்கள் விருப்பப்படி உரங்களின் சில்லரை விலையை உயர்த்தி வந்துள்ளனர். உழவர்கள், விலை மலிவான யூரியா உரத்தை மிகையாகப் பயன்படுத்தத் தொடங்கியிருப்பதால், ஊட்டச்சத்து பயன்பாட்டில் சரி சமவிகிதமின்மைக்கும் வழி கோலியுள்ளது. மாநில அரசு, உர விற்பனையில் மதிப்புக் கூட்டுவரி விதிப்பினைத் தள்ளுபடி செய்ததன் வாயிலாக இந்தக் கொள்கையின் பாதக விளைவுகளை தணிப்பதற்கு முயற்சித்துள்ளது. ஊட்டச்சத்து

அடிப்படையிலான உதவித்தொகை கொள்கையை திரும்பப் பெறுமாறும் அனைத்து உரங்களுக்கும் நிர்ணயிக்கப்பட்ட உயரளவு சில்லரை விலைக் கொள்கையை மீண்டும் அறிமுகப்படுத்துமாறும் நான் கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசு, இன்றியமையாத உரங்கள், குறித்த காலத்தில் கிடைக்கப்பெறுவதை உறுதி செய்ய வேண்டும்.

மத்திய அரசானது, நீடித்த வேளாண்மைக்கான சீரமைக்கப்பட்ட தேசியத் திட்டத்தின் கீழ் வறட்சி பகுதி திட்டத்திற்கும், வறட்சிப் பகுதி அல்லாத தொகுதிக்குமான நுண்பாசன திட்டங்களுக்கான வேறுபட்ட மற்றும் குறைக்கப்பட்ட உதவித்தொகைத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் கீழ், சிறு மற்றும் குறு உழவர்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட 50 சதவீத உதவித்தொகையுடன் ஒப்பிட்டபோது அவர்களுக்கு 35 சதவீத உதவித்தொகை மட்டும் வழங்கப்படுகிறது. வறட்சி பகுதி அல்லாத திட்டத் தொகுதிகளில், ஏனைய உழவர்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட 35 சதவீத உதவித்தொகையுடன் ஒப்பிட்டபோது, அவர்களுக்கு 25 சதவீத உதவித்தொகை மட்டுமே வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில், மொத்தமுள்ள 385 தொகுதிகளில் 305 வறட்சிப் பகுதி அல்லாத தொகுதிகள் ஆகும். இந்தத் தொகுதிகளிலுள்ள உழவர்கள் குறைவான உதவித்தொகையையே பெறுவர். எனவே, சிறு மற்றும் குறு உழவர்களுக்கு 50 சதவீத உதவித்தொகை மற்றும் ஏனைய உழவர்களுக்கு 35 சதவீத

உதவித்தொகை என ஒரே மாதிரியான நடைமுறையை அனைத்துத் தொகுதிகளிலும் தக்கவைக்குமாறு மத்திய அரசிடம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## XIII. உணவுப் பாதுகாப்பு, பொது விநியோகத்திட்டம் மற்றும் விலை கட்டுப்பாடு

### a) தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம்

தேசியஉணவுப்பாதுகாப்புச்சட்டம்இயற்றப்பட்டபோது, உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கு தமிழ்நாடு தெரிவித்த சில முக்கிய கருத்துக்களுக்கு செவி சாய்க்கப்படவில்லை.

✶ இச்சட்டத்தின் கீழ் உத்தரவாதமளிக்கப்பட்ட அளவினைக் காட்டிலும் கூடுதலாக ஏற்கெனவே அதிகளவு உணவு தானியங்களைப் பெறுகின்ற அத்தகைய மாநிலங்களுக்கு வகை செய்யப்பட்ட கூடுதல் உத்தரவாதமளிக்கப்பட்ட அளவிற்கான உணவு தானியங்களின் வழங்கல் விலை மீதான சட்டப்பூர்வமான கட்டுப்படுத்துகின்ற உத்தரவாதத்தினை தமிழ்நாடு கோருகிறது. அத்தகைய கூடுதல் அளவுகள் கிலோ ஒன்றுக்கு ரூ. 3 அல்லது கிலோ ஒன்றுக்கு ரூ.8.30 என

வறுமைக்கோட்டிற்கு மேலுள்ள குடும்பங்களுக்கு, பொருந்தத்தக்க நடப்பு விலையிலேனும் மாநிலங்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

✶ நகர்புற மக்கள் அனைவரும் மானியவிலை உணவு தானியங்கள் ஒதுக்கீட்டிற்கு தகுதி வாய்ந்த குடும்பங்களாக கருதப்பட வேண்டும். மாற்றாக ஊரகப் பகுதியிலுள்ளதைப் போன்று 75 சதவீத மக்களேனும் கருதப்பட வேண்டும்.

✶ இச்சட்டத்தின் விவர அட்டவணை–I செயல்படுத்தப் பட்ட நாளிலிருந்து 3 ஆண்டுகள் கால அளவிற்கு மட்டுமே மானிய விலையிலான உணவு தானியங்களின் வரையறுக்கப்பட்ட ஒதுக்கீட்டிற்கு உத்தரவாதமளிக்கிறது. மானியவிலை உணவு தானியங்களுக்கான உத்தரவாதமானது குறைந்தளவு 10 ஆண்டுகள் கால அளவிற்கு இருக்கப்பட வேண்டும்.

✶ இச்சட்டத்தை உண்மையான உணவுப்பாதுகாப்பு சட்டமாக ஆக்குவதற்கு, பற்றாக்குறை காலங்களில் உணவுதானியங்களை இறக்குமதி செய்வதற்கு மத்திய அரசைக் கட்டுப்படுத்துகின்ற வழிவகை ஒன்று மிகவும் இன்றியமையாததாகும்.

* தகுதி வாய்ந்த குடும்பங்களை கண்டறிவதற்கான நீட்டிக்கப்பட்ட ஓராண்டு கால அளவு என்பது உண்மையில் போதாது. 2 முதல் 3 ஆண்டுகளுக்கேனும் கால அளவு நீட்டிக்கப்பட வேண்டும்.

* யாதொரு ரொக்க மாற்றல் திட்டத்தையும், மாநில அரசின் ஒப்புதலுடன் தான் அறிமுகப்படுத்த இயலும் என்ற தெளிவான குறியீட்டுடன் ரொக்க மாற்றல் மற்றும் உணவு கூப்பன் திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு மத்திய அரசுக்கு அதிகாரமளிக்கின்ற சட்டத்தின் விதித்துறையானது, திருத்தப்பட வேண்டும்.

b) **சிறப்பு பொது விநியோகத் திட்டத்திற்கு கூடுதல் உதவித் தொகை**

தமிழ்நாடு, சிறப்பு பொது விநியோகத் திட்டம் ஒன்றை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு, குறைந்த விலையில் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, சுத்திகரிக்கப்பட்ட, வெளுக்கப்பட்ட, மணம் நீக்கப்பட்ட பாமாயில் ஆகியவை பொது விநியோகக் கடைகள் மூலம் வழங்கப்படுகின்றன. இதனால் ஆண்டொன்றுக்கு மாநில அரசுக்கு ரூ.1,100 கோடி உதவித் தொகை வகையிலான சுமை ஏற்படுகிறது. மத்திய அரசு, இந்த சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் 50% செலவை ஏற்க முன்வரவேண்டும் என்று மத்திய அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

**c) சர்க்கரை லெவி**

தமிழ்நாட்டில், குடும்பம் ஒன்றுக்கு 2 கிலோ வரையில் சர்க்கரை வழங்குகிறது. குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு, கிலோ ஒன்றுக்கு ரூ.13.50 வீதம் 3 கிலோ சர்க்கரையைக் கூடுதலாக வழங்குகிறது. சர்க்கரைக்கான தேவையில் சுமார் 30 சதவீதம், மத்திய அரசின் லெவி ஒதுக்கீடுகளின் மூலம் நிறைவு செய்யப்பட்டு வருகிறது. ஆனால், லெவியின் கீழ் கிலோ ஒன்றுக்கு ரூ. 18.50 என்ற மத்திய அரசின் உதவித் தொகை 2013–2014 மற்றும் 2014–2015 ஆம் ஆண்டுக்கு மட்டுமே உரியது என்று தெரிவித்து சர்க்கரை லெவியைத் திடீரென திரும்பப் பெற்றது கடுமையான அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த ஏற்பாடு, 2014–2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தொடருமா என்பது தெளிவாகத் தெரியவில்லை. மேலும், வெளிச்சந்தையில் கிலோ ஒன்றுக்கு ரூ. 32க்கு மேலே ஏற்படுகிற விலை ஏற்ற இறக்கத்தை மாநில அரசு ஏற்க வேண்டியுள்ளது.

சர்க்கரை ஆலைகள் மீதான லெவி சர்க்கரை கட்டுப்பாட்டை திரும்பப் பெறுகிற முடிவு மறுபரிசீலனை செய்யப்படலாம் என்றும், சர்க்கரையின் லெவி ஏற்பாட்டு முறை தக்க வைக்கப்படலாம் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன். மாற்று ஏற்பாடாக, மத்திய அரசு சர்க்கரையின் வெளிச்சந்தை விலைக்கும், பொது விநியோக முறையில்

வழங்கல் விலைக்கும் இடையிலான வேறுபாட்டுத் தொகை முழுவதையும், 2014–2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மத்திய அரசு, உதவித் தொகையாக ஏற்க வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

## d) சில்லரை வர்த்தகத்தில் அந்நிய நேரடி முதலீடு

பொதுமக்களின் மகத்தான ஆர்வம் சம்பந்தப் பட்டிருப்பதைக் கருத்திற்கொண்டு, பல வணிக சில்லரை வர்த்தகத்தில் 51 சதவீத அந்நிய நேரடி முதலீட்டை அனுமதிப்பது என்ற முடிவைத் திரும்பப் பெறுமாறு மாண்புமிகு பிரதமரிடம் நான் கேட்டுக் கொள்கிறேன்.

## e) தமிழ்நாட்டுக்குப் போதிய மண்ணெண்ணெய் ஒதுக்கீடு

தமிழ்நாட்டில் குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதமொன்றுக்கு வழங்குவதற்கு 65,140 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் தேவைப்படுகிறது. 2010 மார்ச் வரையில் மாதமொன்றுக்கு 59,780 கிலோ லிட்டராக இருந்த ஒதுக்கீடு, கடந்த சில ஆண்டுகளில் பத்து மடங்கு குறைக்கப்பட்டது. தற்போது, அது, 29,056 கிலோ லிட்டராக மட்டுமே உள்ளது. இது, மாநிலத்தின் தேவையில் 45 சதவீதம் மட்டுமேயாகும். எண்ணெய் விற்பனை நிறுவனங்கள் மாநிலத்திலுள்ள திரவப் பெட்ரோலிய எரிவாயு இணைப்புகள் குறித்த

தங்களுடையத் தகவலைப் பகிர்ந்து கொள்ளத் தயக்கம் காட்டுவதால், பெட்ரோலிய அமைச்சகம் வெளியிட்ட தகவலுக்கும், தமிழ்நாட்டிலுள்ள திரவ பெட்ரோலிய எரிவாயு இணைப்புகளின் எண்ணிக்கை குறித்த குடும்ப அட்டை தகவலுக்கும் இடையே 56.16 இலட்சம் அளவுக்கு வேறுபாடு காணப்படுகிறது. திரவப் பெட்ரோலிய எரிவாயு இணைப்புகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது, நாடு முழுவதிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை ஆகும். ஆனால், சில மாநிலங்களில் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு குறைக்கப்படவில்லை என்பது தெரிய வருகிறது.

மாநிலத்தின் தேவை அளவான மாதமொன்றுக்கு 65,140 கிலோ லிட்டர் என்ற மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டு அளவை, உடனடியாக பழைய அளவுக்குத் தக்க வைக்க வேண்டும் என்றும், மாண்புமிகு பிரதமரை நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

**f) பெட்ரோலியத் தயாரிப்புகளின் விலையை நிர்ணயித்தல்**

மத்திய அரசின் டீசல் இரட்டை விலைக் கொள்கை குறித்த முடிவினால் அரசு போக்குவரத்துக் கழகங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அதன் விளைவாக, டீசலை பெருமளவில் வாங்குவோர் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 11.81 காசுகள் அளவுக்கு அதிக விலை கொடுக்க வேண்டியுள்ளது. அரசு போக்குவரத்துக் கழகங்கள், ஏழை, எளிய மக்களுக்கு

போக்குவரத்து சேவையை அளிப்பதையும், பெருமளவிலான மக்களின் தேவையை நிறைவு செய்ய நாடு முழுவதிலும் பேருந்துகள் மூலமான மக்கள் போக்குவரத்தை குறைந்த செலவில் வகை செய்வதையும் கருத்திற் கொண்டு, குறைந்த செலவில் பொதுமக்கள் போக்குவரத்துக்கு வகை செய்யும் நோக்கத்துடன் உதவித் தொகை வகையில் ஏற்படுகிற சுமையைப் பங்கிட்டுக் கொள்வது மத்திய அரசின் சமமான பொறுப்பாகும். மேலும், விலைகளில் அடிக்கடி உயர்வு ஏற்படுவது, பொருளாதாரத்தை நிலை தடுமாறச் செய்து, ஏழை எளிய மக்களை பாதிக்கும்.

எனவே, மத்திய அரசு பின்வருமாறு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது.

a) **பொதுமக்கள் போக்குவரத்து பயன்பாடுகளுக்கு வேறுபடத்தக்க விலை நிர்ணய ஏற்பாட்டிலிருந்து விலக்களித்தல்,**

b) **பெட்ரோலிய தயாரிப்புகளின் விலையை, நீண்ட கால அளவிற்கு நிலையான அளவில் வைத்து வருவதற்கு நிறுவன ரீதியான ஏற்பாடுகளைச் செய்தல்.**

## XIV. காவல் துறையை நவீனமயமாக்கல்

தமிழ்நாடு காவல்துறை, நமது நாட்டிலேயே மிகவும் தொழில் முறை ரீதியான செம்மையான காவல் படையாகும். காவல் துறை மேற்கொண்ட இடையறாத கண்காணிப்புப் பணியினால், நமது மாநிலம், சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிப்பதில் சாதனை படைத்துள்ளது. பன்னாட்டுப் பாதுகாப்பிற்கு ஏற்பட்ட அச்சுறுத்தல்களையும் சிறப்பான முறையில் எதிர்த்து வெற்றி கண்டுள்ளது. முந்தைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு, 2012–2013 முதல் 2016–2017 வரையிலான ஐந்தாண்டு கால அளவிற்கு மாநில காவல் படையை நவீனமயமாக்கும் திட்டத்திற்காக, ரூ. 12,379.30 கோடி ஒதுக்கீட்டிற்கு ஒப்புதல் அளித்திருந்தது. இது, நாட்டின் காவல் துறையின் தேவைகள் முழுவதற்கும் போதுமானதாக இல்லை. காவல் துறையை நவீனமயமாக்குவதற்காக, அடுத்த சில ஆண்டுகளுக்கு, தமிழ்நாட்டிற்கு மட்டுமே சுமார் 10,000 கோடி ரூபாய் தேவைப்படும்.

- வாடகைக் கட்டடங்களில் இயங்குகிற அல்லது மீண்டும் கட்ட வேண்டிய நிலையிலுள்ள பழைய கட்டடங்களில் இயங்குகிற 500 காவல் நிலையங்களுக்கு கட்டடங்கள் கட்டுதல் (ரூ.300 கோடி)
- காவல் துறைப் பணியாளர்களின் 100 சதவீத வீட்டுவசதித் தேவையை நிறைவு செய்வதற்காக, மேலும் 60,000 வீடுகளைக் கட்டுதல் (ரூ. 9000 கோடி)

- நகர்ப்பகுதி காவல் துறையினருக்காக, ரூ. 700 கோடி செலவில் தகவல் தொடர்பு சாதனம், தகவல் பகுப்பாய்வு ஏற்பாட்டு முறைகள் மற்றும் வாகனங்கள் உட்பட சாதனங்களை நவீனமயமாக்குதல்.

உலகத்தரம் வாய்ந்த, நவீன மற்றும் சிறப்பான காவல் துறையை உருவாக்குவதற்காக மத்திய அரசு, கணிசமான நிதியுதவி வழங்க வேண்டுமென்று மாண்புமிகு பிரதமரை நான் கேட்டுக் கொள்கிறேன்.

## XV. நகர்ப்பகுதி மேம்பாடு, நகர்ப்பகுதி வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி உள்கட்டமைப்பு வசதி

தமிழ்நாடு, நமது நாட்டில் அதிக அளவில் நகர்ப்பகுதிகளைக் கொண்ட பெரிய மாநிலமாகத் திகழ்கிறது. நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 48.45% நகர்ப்பகுதிகளில் வாழ்கின்றனர். நகர்ப்பகுதி மக்களின் விருப்ப ஆர்வங்களும் மிகவும் அதிகமாக உள்ளன. நகர்ப்பகுதி உள்கட்டமைப்பு வசதிக்காக, பெருமளவில் முதலீடு செய்ய வேண்டியது அவசியமாகும். 2011 மே வரையில் மாநில அரசு அதை ஓரளவு நிறைவேற்றியுள்ளது. ஒவ்வொராண்டும், சென்னை மாநகர் மற்றும் பிற நகர்ப்பகுதிகளின் உள்கட்டமைப்பு வசதி மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டு, ரூ. 1,250 கோடி கூடுதல் ஒதுக்கீட்டில் இரண்டு திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. தமிழ்நாடு அரசு, நகர்ப்பகுதி வளர்ச்சித் துறையில் பின்வரும் குறிப்பிட்ட கோரிக்கைகளை முன் வைக்கிறது.

- ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்பகுதி புதுப்பித்தல் திட்டத்திலுள்ள குறைபாடுகளை சரிசெய்த பின்னர், மத்திய அரசின் கணிசமான நிதியுதவியுடன் மத்திய அரசு, ஒரு மாபெரும் நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டத்தை உடனடியாகத் தொடங்க வேண்டும்.

- புதிய திட்டத்தின் கீழ், மாநில வாரியான நிதி ஒதுக்கீடு, ஒவ்வொரு மாநிலத்திலும் நகர்ப்பகுதி மக்கள் தொகையின் வீதாச்சாரத்திற்கு ஏற்ப இருக்க வேண்டும்.

- அனுமதியளிக்கிற நடைமுறை, மத்திய அரசின் பிரதிநிதி ஒருவரைக் கொண்ட மாநில அளவிலான குழு ஒன்றிடம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

- திட்டங்களுக்கு, உரிய காலத்திலும், பெருமளவிலும் நிதி வழங்கப்பட வேண்டும். நிதி, இரண்டு தவணைகளுக்கு மேற்படாமல் வழங்கப்பட வேண்டும்.

- மாநகரின் அளவைக் கருத்திற் கொள்ளாமல், மத்திய, மாநில அரசு உள்ளாட்சி அமைப்பு ஆகியவற்றுக்கிடையே **70:15:15** என்ற ஒரே சீரான விகிதாச்சாரத்தில் நிதியுதவி வழங்கும் முறை இருக்க வேண்டும்.

- பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ், எரிசக்தி உற்பத்திக்கான அமைப்புகளுடன் திடக்கழிவு மேலாண்மை திட்டங்கள், கழிவுநீர் சுத்திகரிப்பு திட்டங்கள் ஆகியவை **80:10:10** என்ற விகிதாச்

சாரத்தில் மத்திய அரசின் உயரளவு பங்குத் தொகையுடன் மேலும் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

- தமிழ்நாடு, அனைத்து நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களிலும் பாதாள சாக்கடை திட்டத்தைச் செயல்படுத்தக் கருதியுள்ளது. மொத்தம் ரூ. 20,820 கோடி செலவில் 3 மாநகராட்சிகள், 117 நகராட்சிகள் மற்றும் 516 பேரூராட்சிகளில் இத்திட்டத்தைத் தொடங்குவதற்கு விரிவான திட்ட அறிக்கைகள் ஆயத்தமாக உள்ளன.

- பாதாள சாக்கடை திட்டத்திற்காகவே மத்திய அரசிடமிருந்து தனி நிதியுதவி அவசியமாகிறது.

- தமிழ்நாட்டில் நகர்ப்பகுதி வீட்டுவசதி ஒரு சவாலாக உள்ளது. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் 14.63 இலட்சம் குடும்பங்கள் நகர குடிசைப் பகுதிகளில் வசிக்கின்றனர். குடிசைப் பகுதிகள் குறித்த வீட்டுவசதி ஆய்வு, இதன் எண்ணிக்கை மேலும் அதிகமாக உள்ளது என்று தெரிவிக்கிறது. இந்தப் பகுதிகளின் 25 சதவீத வீட்டுவசதித் தேவைகளை எடுத்துக் கொண்டால் கூட ரூ. 29,200 கோடி முதலீட்டில் சுமார் 3.65 இலட்சம் வீடுகளை இன்னும் கட்ட வேண்டியுள்ளது. இது, மத்திய அரசிடமிருந்து கணிசமான நிதியுதவி கோருகிற மாபெரும் நிதிச் சவாலாக அமைந்துள்ளது.

## XVI. கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்களுக்கு மத்திய அரசின் ஆதரவு

தமிழ்நாடு, நீர் பற்றாக்குறை உள்ள ஒரு மாநிலமாகும். இம்மாநிலத்தில் மேற்பரப்பு நீர் மிகக் குறைந்த அளவே உள்ளது. நிலத்தடி நீர் ஆதாரங்களும் விரைவாகக் குறைந்து வருகின்றன. தற்போதுள்ள குடிநீர் வழங்கலை அதிகரிப்பதற்கு அல்லது பழைய முறைகள் மூலம் புதிய ஆதாரங்களை உருவாக்குவதற்கு மிக குறைந்த வாய்ப்பே உள்ளது. சென்னை மாநகரில் மட்டும் முன் கணிப்பு செய்யப்பட்ட தேவை, 2017 ஆம் ஆண்டில், நாளொன்றுக்கு 1,584 மில்லியன் லிட்டராக உள்ளது. ஆனால், தற்போதைய ஆதாரங்களிலிருந்து நீர் வழங்கல், நாளொன்றுக்கு 831 மில்லியன் லிட்டராக உள்ளது. கடல்நீரைக் குடிநீராக மாற்றுவதற்காக, பெரிய உவர் தன்மை நீக்கும் நிலையங்களை அமைப்பதைத் தவிர வேறு வழி ஏதுமில்லை. தற்போது நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட இரண்டு நிலையங்கள் இயங்கி வருகின்றன. தேவை–வழங்கல் ஆகிய இரண்டுக்கும் இடையே உள்ள பெருமளவிலான வேறுபாட்டைச் சரிசெய்ய, மாநில அரசு, பின்வரும் திட்டங்களை செயல்படுத்தக் கருதியுள்ளது.

- சென்னை அருகேயுள்ள நெமிலியில் ரூ. 1,371.86 கோடி செலவில் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் திறனுள்ள SWRO கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் அமைத்தல். விரிவான திட்ட அறிக்கை ஆயத்தமாக உள்ளது.

- சென்னை அருகே பேரூரில் ரூ. 4,070.67 கோடி செலவில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் திறனுள்ள SWRO கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் அமைத்தல்.
- இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடியில் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்தை அமைத்தல் ஒவ்வொன்றும் ரூ. 1,500 கோடி செலவில், நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் திறனுள்ள விரிவான திட்ட அறிக்கை, 2014 டிசம்பருக்குள் ஆயத்தமாகிவிடும்.

நிறைவேற்றக் கருதியுள்ள திட்டங்களில் 50% செலவையாவது ஏற்குமாறு மாநில அரசு, மத்திய அரசிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

## XVII. சென்னை மெட்ரோ இரயில் விரிவாக்கம் மற்றும் மெட்ரோ இரயில் நிலை II / மெட்ரோ ரயில் தொடர்பான நிலுவையாக உள்ள கொள்கை பிரச்சினைகள்.

மத்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசின் கூட்டுத் தொழில் நிறுவனமான சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சில முக்கியமான கொள்கை பிரச்சினைகள் குறித்து மத்திய அரசிடமிருந்து ஆதரவு கோருகிறது.

a) நாளது வரையிலாக்கப்பட்ட ரூ. 3,253 கோடி நிறைவு மதிப்பீட்டுச் செலவிலான 9.051 கி.மீட்டரை உள்ளடக்கிய திருவொற்றியூர் மற்றும் விம்கோ நகர்

வரையிலான சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் பெருவழியின் விரிவாக்கம் மத்திய அரசின் ஒப்புதலை எதிர்நோக்கியுள்ளது.

b) சென்னை மெட்ரோ இரயில் திட்டம் நிலை–II பெருவழித் திட்டத்தைச் செயல்படுத்தல் – மொத்தம் 76 கி.மீ நீளமுள்ள மூன்று பெருவழிகள், நிலை–IIன் கீழ் செயல்படுத்துவதற்காக தெரிவுச் செய்யப்பட்டுள்ளன. இந்தப் பெருவழிகளின் தற்காலிகச் செலவு சுமார் ரூ. 36,100 கோடியாகும். இத்திட்டம், மத்திய அரசின் முழு ஆதரவையும் கோருகிறது.

c) **சென்னை, மாநகர விரைவு இரயில் போக்குவரத்துத் திட்டத்தை, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்துடன் ஒருங்கிணைத்தல்.**

மாநகர விரைவு இரயில் போக்குவரத்து திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு கணிசமாக நிதியுதவி அளித்துள்ளதால், இரயில்வே துறை செயல்படுத்துகிற ஒரு திட்டமான சென்னை மாநகர விரைவு இரயில் போக்குவரத்து திட்டத்தை, மெட்ரோ இரயில் திட்டத்துடன் ஒருங்கிணைப்பது உகந்ததும், சாத்தியமானதுமாகும். இது, பொதுமக்களின் பல்வேறு போக்குவரத்து முறைகளுக்கு இடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும். பொதுமக்கள் போக்குவரத்திற்கான பங்கினையும் அதிகரிக்கும். இப்பிரச்சினை, இரயில்வே போர்டு/இரயில்வே அமைச்சகம் ஆகியவற்றின் பரிசீலனையின் கீழ் உள்ளது.

**d) மத்திய அரசின் பாதுகாப்பு மற்றும் அஞ்சல் துறைகள் பின்பற்றுகிற நிலக் கொள்கைக்காக நிலத்தை ஆய்வு செய்தல்.**

பாதுகாப்புத் துறையும், அஞ்சல் துறையும் பின்பற்றுகிற ''நிலத்திற்கு நிலம்'' என்ற கொள்கை, திட்டத்தை, உரிய காலத்தில் செயல்படுத்துவதற்கு பெரிய தடையாக உள்ளது. நகர்ப்பகுதியில் நிலத்தின் மதிப்பு மிகவும் அதிகமாக இருப்பதாலும் பெருநகரப் பகுதிகளில் மாநில அரசின் மாற்று நிலம் கிடைக்காததாலும் இது எதிர்–ஆதாயத்தன்மை வாய்ந்ததாக உள்ளது. நகர்ப்பகுதிகள் அல்லாத பகுதிகளில் சம மதிப்புள்ள மாற்று நிலத்தை மிகுந்த பரப்பளவில் மாற்ற வேண்டியிருக்கும். இது, மக்களின் வாழ்வாதாரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும். துறைகள், எந்தவொரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகவும் நிலத்தை உடனடியாகக் கோருவதில்லை. எனவே, ''நிலத்திற்கு நிலம்'' என்ற நடைமுறை சாத்தியமற்ற கொள்கை, உடனடியாக ஆய்வு செய்யப்பட வேண்டும்.

**e) மெட்ரோ இரயில் திட்டப் பணிகளுக்கான இரயில்வே நிலங்களை மாற்றுதல் மற்றும் இரயில் தண்டவாளங்களை/ நிலங்களை கடப்பதற்கு அனுமதி குறித்த கொள்கை மறு ஆய்வு**

இரயில்வே துறை, 35 வருட குத்தகைத் தொகையாக நிலத்தின் முழு அங்காடி மதிப்பின் 99 சதவிகிதத்தை வசூலிக்கிறது. மெட்ரோ இரயில் போன்ற பொது உள்கட்டமைப்பு வசதி திட்டப் பணிக்காக இரயில்வே நிலத்தில் மேற்கொள்ளப்படும் நிலத்தடி செயல்பாடுகளுக்கும்

இத்துறைத் தொகையை வசூலிக்கிறது. இது நியாயமாகத் தோன்றவில்லை. மேற்பரப்பு பயன்பாட்டிற்கு, நியாயமான குத்தகை வாடகை வசூலிக்கப்படவேண்டும் அல்லது முழு அங்காடி மதிப்பு செலுத்துவதன் பேரில் நிலத்தை நிரந்தரமாக மாற்றிக்கொள்ளவேண்டும். மேற்பரப்பு உரிமைகள் பாதிக்கப்படாதபோதிலும், நிலத்தடி பயன்பாட்டிற்கு எவ்வித கட்டணமும் விதிக்கப்படக்கூடாது.

## XVIII. போக்குவரத்து உள்கட்டமைப்பு வசதி திட்டப்பணிகள்

### a) இந்திய இரயில்வே துறை திட்டப்பணிகள்

நான், 2023ஆம் ஆண்டு தமிழ்நாடு தொலைநோக்குத்திட்டத்தை தொடங்கி வைத்தேன். இது, 2023 ஆம் ஆண்டிற்குள் மாநிலத்தில் உள்கட்டமைப்பு வசதிக்கு ரூ.15 இலட்சம் கோடி முதலீட்டிற்கு வகை செய்கிறது. 2023 ஆம் ஆண்டு தொலை நோக்குத் திட்ட ஆவணத்தின் கீழ், மேற்கொண்டும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் பொருட்டு ஏறத்தாழ ரூ.1,88,400 கோடி மதிப்பிலான 10 முக்கிய இரயில்வே திட்டப்பணிகள் கண்டறியப்பட்டுள்ளன.

இரயில்வே அமைச்சகம் இந்த திட்டப்பணிகளை உடனடியாகப் பரிசீலித்து அனுமதியளிக்கவேண்டும்.

### (b) மத்திய போக்குவரத்துத் திட்டப்பணிகள்

தமிழ்நாடு 2023 ஆம் ஆண்டு தொலைநோக்குத் திட்டமானது, சென்னை – பெங்களூரு விரைவுச்சாலை,

தேசிய நெடுஞ்சாலை –4ஐ, ஆறு / எட்டு வழிச் சாலையாக மாற்றுதல், எண்ணூரில் திரவ நைட்ரஜன் எரிவாயு முனையம், மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் தூத்துக்குடியிலுள்ள விமான நிலையங்களை விரிவாக்குதல் உள்ளிட்ட மொத்தம் ரூ.21,320 கோடி செலவு பிடிக்கின்ற முக்கியமான போக்குவரத்து திட்டப்பணிகளை மேற்கொள்வதற்கும் வகைசெய்கிறது.

**c) புற வட்டச்சாலை திட்டப்பணி**

மகாபலிபுரத்துடன் எண்ணூர் துறைமுகத்தை இணைக்கின்ற 162 கிமீ தொலைவுடன் கூடிய சென்னை புறவட்டச்சாலை அமைப்பதற்கு கருதப்பட்டுள்ளது. இந்தச் சாலையானது, கிழக்கு கடற்கரை சாலை, தகவல் தொழில்நுட்ப நெடுஞ்சாலை–தேசிய நெடுஞ்சாலை–45, தேசிய நெடுஞ்சாலை–4, தேசிய நெடுஞ்சாலை–205 தேசிய நெடுஞ்சாலை–5 ஆகியவற்றை எண்ணூர் மற்றும் காட்டுப்பள்ளி துறைமுகங்களுடன் இணைக்கும். எனவே, இத்திட்டப்பணியானது, சென்னை மாநகரத்திற்குப் பயனளிப்பதுடன் அல்லாமல், புதுச்சேரி, கருநாடகம் மற்றும் ஆந்திரப் பிரதேசத்திற்கான துறைமுக இணைப்பையும் மேம்படுத்தும். நிலம் கையகப்படுத்தல் உட்பட திட்டச்செலவானது சுமார் ரூ.12,000 கோடி ஆகும். மத்திய அரசிடம் உரிய அளவில், 40% திட்டச்செலவினையேனும் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

### d) சென்னைக்கான நுண்ணறிவு போக்குவரத்துத் தீர்வுகள்

உலகிலுள்ள அண்மைக்கால தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சென்னை மாநகரில் தற்போதுள்ள போக்குவரத்து மேலாண்மை ஏற்பாட்டு முறையை மேம்படுத்துவதற்கான அவசரத் தேவை ஏற்பட்டுள்ளது. ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகவரமைப்பானது, சென்னை மாநகரத்திற்கும் நுண்ணறிவு போக்குவரத்துத் தீர்வுகள் பெருந்திட்டத்தைத் தயாரிப்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வு / விரிவான திட்ட அறிக்கை ஒன்றை தெரிவித்துள்ளது. 2014–2015 ஆம் நிதியாண்டில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகவரமைப்பிடமிருந்து நிதியுதவி பெறுவதற்காக திட்டப்பணியை முதன்மைத் திட்டத்திலிருந்து சேர்க்குமாறு மத்திய அரசிடம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## XIX. சுகாதாரத் துறை பிரச்சினைகள்

### a) தேசியத் தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு – உச்ச நீதிமன்றத் தீர்ப்பினை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு மனுவை திரும்பப் பெறுமாறு மத்திய அரசிடம் கேட்டுக்கொள்ளுதல்.

மாண்பமை உச்சநீதிமன்றம், மருத்துவம் மற்றும் பல்மருத்துவம் இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்புகளுக்கு தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வினை அறிமுகப்படுத்துகின்ற வகையில் இந்திய மருத்துவக் கழகமும் இந்திய பல்மருத்துவக்கழகமும் வெளியிட்ட

அறிவிக்கையை, தமிழ்நாடு தெரிவித்த எதிர்ப்புகளின் அடிப்படையில் தள்ளுபடி செய்தது. பொது நுழைவுத் தேர்வுகளில் ஊரக மாணவர்களும் சமூக பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய ஏழை மாணவர்களும் நகர்ப்பகுதி மாணவர்களுடன் போட்டியிட முடியவில்லை என்பது வல்லுநர் குழு மேற்கொண்ட விரிவான ஆய்வில் தெரியவந்த பின்னர் தமிழ்நாடு அரசு, தொழிற் பட்டப்பிடிப்புகளுக்கான நுழைவுத் தேர்வுகளை ரத்துசெய்துவிட்டது. தமிழ்நாடு, தொழிற்படிப்புகளுள், பிற்படுத்தப்பட்டவர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான 69% இட ஒதுக்கீட்டினையும் பின்பற்றி வந்துள்ளது. பட்டமேற்படிப்புகளுக்கு, ஊரகப்பகுதிகளில் பணிபுரிந்துள்ளவர்களுக்கு, குறிப்பாக, மலைவாழ் மற்றும் பழங்குடியினர் பகுதிகளில் பணிபுரிகின்றவர்களுக்கு தமிழ்நாடு முன்னுரிமை அளிக்கின்றது. தேசியத் தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு போன்ற பொது நுழைவுத் தேர்வு அறிமுகப்படுத்தப்படுவதால், தமிழ்நாட்டில் மருத்துவம் மற்றும் பல்மருத்துவம் மாணவர் சேர்க்கைகளில் இடஒதுக்கீட்டுக் கொள்கை, ஊரகப் பகுதிகளில் பணிபுரிவதற்கான நிறையளவு ஆகிய இரண்டையும் சுமூகமாகச் செயல்படுத்துவதில் குழப்பத்தை விளைவிக்கும்.

இச்சூழலில், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு எடுத்த நிலைப்பாட்டை ஆய்வுசெய்து, சீராய்வு மனுவைத் திரும்பப்பெறுமாறும் மாண்பமை உச்சநீதிமன்றத்தின் முடிவின்படி செயல்படுமாறும் மாண்புமிகு பிரதமரிடம் தமிழ்நாடு வலியுறுத்துகிறது.

b) **அரசு மருத்துவக் கல்லூரிகளில் மருத்துவப் படிப்புகளுக்கான இடங்களுக்கு இந்திய மருத்துவக் கழகம் ஒப்புதலளித்தல்.**

தமிழ்நாட்டில் 19 அரசு மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. இதில் மொத்தம் 2,555 இடங்கள் உள்ளன. கடந்த ஐந்தாண்டுகளில் தொடங்கப்பட்ட மூன்று புதிய கல்லூரிகளிலும் தற்போதுள்ள ஏழு பழைய கல்லூரிகளிலும் அனுமதிக்கப்பட்டுள்ள கூடுதல் இடங்களுக்கான 2014–2015 ஆம் ஆண்டிற்கான மாணவர் சேர்க்கைகளுக்கான முறைப்படியான ஒப்புதல் இது வரையில் பெறப்படவில்லை.

இந்த இடங்கள், திருவாரூர், சிவகங்கை மற்றும் திருவண்ணாமலையிலுள்ள புதிய மருத்துவக் கல்லூரிகளிலும், சென்னையிலுள்ள கீழ்ப்பாக்கம், சென்னை மற்றும் ஸ்டான்லி மருத்துவக் கல்லூரிகளிலும் மற்றும் செங்கல்பட்டு, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் தூத்துக்குடியில் தற்போதுள்ள மருத்துவக் கல்லூரிகளிலும் உள்ளன.

விரைந்து ஒப்புதல்கள் வழங்குவதற்கும் மாணவர் சேர்க்கைக்கு அனுமதி வழங்குவதற்குமான அவசியத்தை இந்திய மருத்துவக் கழகத்திடம் வலியுறுத்துமாறு மத்திய அரசிடம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

c) **சென்னையில் ரூ.142.60 கோடி செலவில் தேசிய முதுமையியல் நிறுவனம் ஏற்படுத்துவதற்கு விரைவாக ஒப்புதல் அளிக்கப்படலாம்.**

d) **சென்னையில் ரூ.200 கோடி மதிப்பீட்டுச் செலவில் இந்திய நவீன செவிலியர் நிறுவனம் ஏற்படுத்துவதற்கு விரைவாக ஒப்புதல் அளிக்கப்படலாம்.**

e) ரூ.1,051.15 கோடி மதிப்பிலான தேசிய நகர்ப்பகுதி சுகாதாரத் திட்டத்திற்கான ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகவரமைப்பு நிதியுதவிக் குறித்து மத்திய அரசிடம் நிலுவையிலிருக்கின்ற செயற்குறிப்பைத் துரிதப்படுத்தலாம்.

## XX. தொழில் வளர்ச்சி பிரச்சினைகள்

a) குறிப்பாக தமிழ்நாடு (7 மாவட்டங்கள்) கருநாடகம் (7 மாவட்டங்கள்), ஆந்திரப்பிரதேசம் (2 மாவட்டங்கள், அவற்றுள் ஒன்றில் ஒரு பகுதி) ஆகிய மாநிலங்கள் பயனடையும் பொருட்டு, சென்னை பெங்களூரு தொழிலகப் பெருவழிச்சாலைத் திட்டத்தைச் செயல்படுத்தக் கருதப்பட்டது. இந்தப் பெருவழிச்சாலைப் பகுதியானது, ஆந்திரப்பிரதேசத்தின் நெல்லூர் மாவட்டம் வரையில் அண்மைக்காலத்தில் விரிவாக்கப்பட்டுள்ளது. இத்தகைய விரிவாக்கம் பெருவழிச்சாலை வளர்ச்சிக் கொள்கையையும் சென்னை மற்றும் பெங்களூருவை இணைக்கின்ற தேசிய நெடுஞ்சாலை–46–இன் இருமருங்கிலும் 75 கிமீ தொலைவு என்ற பெருவழிச்சாலை முக்கியத்துவம் மிகுந்த பகுதி கொள்கையையும் சீர்குலையச்செய்துள்ளது. பெருவழிச்சாலையில் ஆந்திரப்பிரதேசத்திலுள்ள கிருஷ்ணாபட்டினத்தைச் சேர்ப்பது, பொதுத்துறைத் துறைமுகங்களின் அதாவது சென்னை மற்றும் எண்ணூரின் நீண்டகால நலன்களை மோசமாக

பாதிக்கும். முந்தையக் கொள்கை மற்றும் தமிழ்நாட்டால் ஒப்புக்கொள்ளப்பட்டத் திட்டத்தின் அடிப்படையில் மட்டுமே, திட்டப்பணி மேற்கொள்ளப்படவேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**b) தேசிய முதலீடு மற்றும் தயாரிப்பு மண்டலங்கள்**

பொதுவான உயர்தரத் தொழில்நுட்ப உள்கட்டமைப்பு களைக் கொண்டுள்ள தூத்துக்குடி மாவட்டம் விளாத்திக்குளம் (5,780 ஏக்கர்), வேலூர் மாவட்டம் கட்ரம்பாக்கம் (2,150 ஏக்கர்), கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் (2,300 ஏக்கர்) ஆகிய மூன்று இடங்களில் புதிதாக மூன்று தயாரிப்பு மண்டலங்களை உருவாக்க தமிழ்நாடு அரசு உத்தேசித்துள்ளது. (நிம்) 2க்கான தற்போதைய வரையறைகளின்படி, ஒரு நிம் 2 ஐ உருவாக்குவதற்கு குறைந்தது 5,000 ஹெக்டர் பரப்பளவு நிலம் (12,500 ஏக்கர்) தேவைப்படுகிறது. தமிழ்நாடு போன்ற மாநிலத்தில், இவ்வளவு பரப்பளவு நிலம் சேர்ந்தார்போல்/அருகருகில் இருப்பதை காண்பது கடினமான ஒன்றாகும். எனவே, மத்திய அரசு, தமிழ்நாடு அரசால் உத்தேசிக்கப்பட்டுள்ளவாறு, நிலப்பரப்பு வரையறைகளைத் தளர்த்தி, நிம் 2 களுக்கு ஒப்புதல் வழங்கலாம்.

**c) தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களுக்கு சிறப்பு தொகுப்பு நிதியுதவி : –**

தமிழ்நாட்டின் பத்து தென் மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள தொழில் பிரிவுகளுக்கு சிறப்புச்

சலுகைகள் அளிப்பதற்காக தமிழ்நாடு அரசு முயற்சி எடுத்து வருகிறது. இமாச்சலப் பிரதேசம் உத்ரகாண்ட், தற்போதைய சீமாந்தரா போன்ற மாநிலங்களுக்கு மத்திய அரசால், என்ன உதவி வழங்கப்பட்டு வருகிறதோ அதேபோன்ற சிறப்பு தொகுப்பு நிதியுதவி இந்த மாவட்டங்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

- 10 ஆண்டுகளுக்கு 100 சதவீத ஆயத்தீர்வை விலக்களிப்பு.
- தளவாடம் மற்றும் இயந்திரங்களுக்கு 15 சதவீத முதலீட்டு மானியம்.
- தொடக்கத்தில், முதல் ஐந்தாண்டு கால அளவுக்கு அனைத்து புதிய தொழிற் பிரிவுகளுக்கும் 100 சதவீத வருமான வரி விலக்களிப்பு.

**d) இந்துஸ்தான் போட்டோ பிலிம் நிறுவனம், நீலகிரி**

2012 ஆம் ஆண்டிலேயே கனரக தொழில்துறை அமைச்சகத்தால், பொருளாதார விவகாரங்கள் குறித்த அமைச்சரவைக் குழுவின் முன் ஏற்கெனவே வைக்கப்பட்டச் செயற்குறிப்பின் அடிப்படையில், நீலகிரி இந்துஸ்தான் போட்டோ பிலிம் நிறுவனத் தொழிற்பிரிவை மீட்டெடுப்பது அவசியமானதாகும்.

## XXI. தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்துக்கு டிஜிட்டல் அட்ரசிபிள் சிஸ்ட்டத்திற்க்கு (Digital Addressable System) உரிமம் வழங்குதல்

தமிழ்நாடு அரசு, கேபிள் டிவி நிறுவனத்தை தமிழ்நாடு அரசு மீட்டெடுத்து, தமிழ்நாட்டில் கேபிள் டிவி சேவையை வழங்கி வருகிறது. தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், டிஜிட்டல் அட்ரசிபிள் சிஸ்ட்ட உரிமம் வழங்க வேண்டி மத்திய அரசுக்கு 05.07.2012 மற்றும் 23.11.2012 ஆகிய தினங்களில் விண்ணப்பித்திருந்தது. இந்த விண்ணப்பங்கள், தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்திடம் இன்னும் நிலுவையாக உள்ளது. குறிப்பிட்ட தனியாரின் (வணிகத்திற்கு) உதவும் நோக்குடன், முந்தைய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு , மாநில அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு டி.எ.எஸ் உரிமத்தை வேண்டுமென்றே வழங்கவில்லை. எனவே, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு டி.எ.எஸ் உரிமத்தை வழங்குகிற பிரச்சினைக்கு மத்திய அரசு விரைந்து தீர்வு காண வேண்டியது அவசியமாகும்.

## XXII. உயர்நீதி மன்றத்தில் தமிழை ஆட்சி மொழியாகப் பயன்படுத்துதல்

தொன்மைமிகு தமிழ்மொழியை, இந்தியாவின் ஆட்சிமொழியாக உருவாக்க வேண்டும் என்பது தமிழ்நாட்டு மக்களின் நீண்ட நாள் கோரிக்கை ஆகும். இந்திய

அரசியமைப்புச் சட்டத்தின் **VII** ஆவது அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள அனைத்து மொழிகளையும், இந்தியாவின் ஆட்சி மொழிகளாக அறிவிக்கப்பட வேண்டும் என்று தமிழ்நாடு அரசு மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

உயர்நீதி மன்றத்தில் தமிழ்மொழி பயன்படுத்தப்பட வேண்டும் என்ற தமிழ்நாட்டு மக்களின் நீண்ட நாளைய வேண்டுகோள் நிலுவையாகவே உள்ளது. எனவே, சென்னை உயர்நீதி மன்றத்தில் தமிழ்மொழியைப் பயன்படுத்த வகைச் செய்யும் பொருட்டு உச்சநீதிமன்றத்தின் கவனத்திற்கு இதனை மீண்டும் மத்திய அரசு கொண்டுச் செல்ல வேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன்.

## XXIII. மாநில மனித உரிமைகள் ஆணையத் தலைவர் நியமனத்திற்கான தகுதிகள்

தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத் தலைவர் பதவியிடம் தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் கிடைக்காத காரணத்தால் 27.08.2011 லிருந்து நிரப்பப்படாமல், வெற்றிடமாகவே உள்ளது. எனவே, உயர்நீதிமன்ற நீதிபதியாக குறைந்தது ஏழாண்டு கால அனுபவம் பெற்ற உயர்நீதி மன்றங்களின் ஓய்வு பெற்ற நீதிபதிகளை தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தலைவர் பதவிக்கு தகுதியுடையவராகச் செய்யும் வகையில் 1993 ஆம் ஆண்டு மாநில மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தில்

21 (2) (a) பிரிவில் தக்க திருத்தம் செய்ய தமிழ்நாடு அரசு உத்தேசித்துள்ளது. எனவே, 1993 ஆம் ஆண்டு மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தில், விரைந்து திருத்தம் செய்யுமாறு மத்திய அரசிடம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## XXIV. ஆதி–திராவிடர் / பழங்குடியினர் மாணவர்கள் பொறியியல் பட்டப் படிப்பில் சேருவதற்கான தகுதியானக் குறைந்தளவு மதிப்பெண்கள்

தற்போது பி.இ/பி.டெக் பட்டப்படிப்புகளின்முதலாம் ஆண்டு சேர்க்கைக்கு, பொதுப்பிரிவினருக்கு 45 சதவீதம் எனவும், இடஒதுக்கீட்டு பிரிவினருக்கு 40 சதவீதம் எனவும், குறைந்தளவு மதிப்பெண்களை, AICTE வரையறுத்துள்ளது. இருப்பினும், எஸ்.சி/எஸ்.டி. பிரிவினருக்கு தகுதியுடைய மதிப்பெண், 35 சதவீதம் என தமிழ்நாடு வரையறுத்துள்ளது.

2012–2013 ஆம் ஆண்டுக்கானக் கல்வி ஆண்டில், மாணவர் சேர்க்கைக்காக எஸ்.சி/எஸ்.டி. மாணவர்களுக்கான AICTE யின் வரையறைகளுக்கெதிராக ரிட் மனு ஒன்றை மாநில அரசு தாக்கல் செய்திருந்தது. ஆயினும், உயர்நீதி மன்றம் 20.07.2012 ஆம் நாளிட்ட அதன் உத்தரவில், AICTE இன் வரையறைகளை கடைப்பிடிக்குமாறு வலியுறுத்தியது. மாநில அரசின் ரிட் மேல்முறையீடும் தள்ளுபடி செய்யப்பட்டது.

தமிழ்நாடும், இது குறித்து இந்திய உச்சநீதிமன்றத்தில் சிறப்பு அனுமதி மனுவைத் தாக்கல் செய்தது AICTE இதுவரையில் எதிர் உறுதிமொழிப் பத்திரம் தாக்கல் செய்யவில்லை. இவ்வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையாக உள்ளது. எனவே 2013–2014 ஆம் ஆண்டிலும், எஸ்.சி/எஸ்.டி. மாணவர் களுக்கான தகுதி மதிப்பெண் 40 சதவீதம் என்றே நிர்ணயிக்கப்பட்டது.

சமூகநீதியையும், சமத்துவத்தையும் கருத்திற் கொண்டு, எஸ்.சி/எஸ்.டி மாணவர்களுக்கான தகுதி மதிப்பெண் 35 சதவீதம் (இது 12 ஆம் வகுப்பில் தேர்ச்சிக்குரிய மதிப்பெண் ஆகும்) என நிர்ணயம் செய்ய AICTE –க்கு மத்திய அரசு உத்தரவிட வேண்டும் என தமிழக அரசு கேட்டுக்கொள்கிறது.

## XXV. பஹ்ரைன் நாட்டில் வாழும் தமிழ்நாட்டு மீனவர்கள்

பஹ்ரைனில் ஒப்பந்த அடிப்படையில், மீன்பிடிக்கும் நிறுவனத்தில் பணிபுரிந்துவரும், தமிழ்நாட்டு மீனவர்கள் 18 பேரில் தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்திய மீனவர் ஒருவர் கடல் கொள்ளையர்களால் சுட்டுக் கொல்லப்பட்டதால் மீனவர்கள் தாயகம் திரும்ப விரும்புகின்றனர் எனத் தெரியவருகிறது. பஹ்ரைனிலிருந்து அவர்கள் திரும்பி

வருவதைத் தடுத்து நிறுத்தும் வகையில், துரதிர்ஷ்டவசமாக இந்த 18 மீனவர்களின் கடவுச் சீட்டுக்களும் அவர்களுக்கு வேலையளித்தவரிடமே உள்ளது. எனவே, பஹ்ரைனில் உள்ள இந்தியத் தூதரகத்திற்கு இந்தப் பிரச்சினையைக் கொண்டுச் செல்ல வேண்டுமென வெளிவிவகாரத்துறை அமைச்சகத்திற்கு உத்தரவிட வேண்டுமென்றும், இந்த இந்திய மீனவர்கள் அரசுச் செலவிலேயே பஹ்ரைனிலிருந்து சொந்த ஊர்களுக்கு எந்த இடையூறுமின்றி செல்வதற்கு, வெளியுறவுத்துறை மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

★ ★ ★

**“தமிழகமே எனது குடும்பம்.**

**தமிழ்நாட்டு மக்களே என் பிள்ளைகள்.**

**தமிழக மக்களின் நலனே என் நலன்.”**

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்